தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 3—9—55 | சனிக்கிழமை | இதழ் 12

மகளுக்கும் இளையவள் தாய்!

அண்மைக் காலம் வரை தமிழிலக்கியம் என்ற தொடர் பெரும்பாலும் தேவாரகாலத்துக்குப் பிற்பட்ட இலக்கியத்துக்கே கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அறிஞர் கால்டுவெல், பேராசிரியர் பேர்ப்பையர் போன்ற மேனாட்டறிஞர்கள் தமிழிலக்கியத்தின் பெருமை, தொன்மை ஆகியவற்றை வானளாவப் புகழ்ந்தபோது அவர்கள் மனத்திற்கொண்ட பெருமையும் பழமையும் சங்க இலக்கியத்தைக் குறித்த பெருமையோ பழமையோ அல்ல. ஏனெனில் திருக்குறள், நாலடியார் நீங்கலாக ஏனைய சங்க நூல்கள் அக்காலத்தில் வெளிவரவில்லை. சங்க காலத்தைப் பற்றிய அறிவு பரவாத காரணத்தால் திருக்குறளையும் நாலடியையும் அவர்கள் பிற்காலத்துடன் அதாவது தேவார காலமாகிய கி. பி. 6-7-ம் நூற்றாண்டுகளுடன் ஒன்றுபடுத்தியே கூறினர். இவ்வளவு பிற்பட்ட கால இலக்கியத்தையே அறிந்த அவர்கள் தமிழிலக்கியத்தின் பழமையைப் பற்றியும் பெருமையைப் பற்றியும் இவ்வளவு வானளாவப் புகழ்ந்தது இன்று வியப்புக்குரிய செய்தியாகத் தோன்றக்கூடும். ஆயினும் வரலாற்றடிப்படையில் பார்த்தால் இதில் வியப்புக்கு இடமில்லை. ஏனெனில் இப்பிற்பட்ட காலத்தில்கூட இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்தத் தாய்மொழியிலும் இலக்கிய மடை இருந்ததில்லை. அது மட்டுமோ? பண்டை இலக்கிய மொழி எனப்புகழ் பெற்றுள்ள வடமொழியில்கூட இலக்கியம் தோன்றியதும் வளர்ந்ததும் இக்காலத்திலும் இதற்குப் பிற்பட்ட காலத்திலுமேதான். ஆகவே வடமொழியிலக்கியத்துடன் தோன்றி அதனுடன் வளர்ச்சியடைந்த சமகால இலக்கியம் என்ற சிறப்பு இப்பிற்காலத் தமிழிலக்கியத்திற்கு உண்டு என்னலாம்.

சங்க இலக்கிய அறிவு பரவாத நம் தந்தையர் காலத்துப் பழம் புலவர்களிடையே ஒருவர் அறிஞர் உ. வே. சாமிநாதனர். தமிழ்ப் புலவர் புலமை யெல்லையை அவர் தம் அழகிய கட்டுரை ஒன்றில் தீட்டியுள்ளார். கல்லூரித் தலைமையாசிரியர் ஒருவர் அவர்தம் புலமையைப் பாராட்டியபின், அவரிடம் 'தாங்கள் சிலப்பதிகாரம் பயின்றிருக்கிறீர்களா?' என்று கேட்டாராம். "நான் அதன் பெயர் தானும் இதுவரை கேட்டதில்லை" என்றாராம் புலவர். இதன்பின் அவருக்குத் தொன்னூல்களில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாகவே ஆறுமுக நாவலர், எல்லப்ப நாவலர், பவானந்தம் பிள்ளை, சி. வை. தாமோதரம் பிள்ளை ஆகியவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவரும் தொன்னூலேடுகளில் புதைந்துள்ள நாட்டுச் செல்வங்களை வெளியிடும் பணியில் ஈடுபடலாயினர். அதன் பிற்படத் தோன்றி இப்போது தழைத்தோங்கிவரும் தற்காலத் தமிழ் மறுமலர்ச்சி யூழியில்தான் சங்க இலக்கிய அறிவு புலவர்களிடையேயும் ஆசிரியரிடையேயும் மண்டி, மாணவரிடையேயும் பொதுமக்களிடையேயும் தோய்ந்து ஊறி ஆர்வமூட்டத் தொடங்கியுள்ளது.

சங்க இலக்கியம் பற்றிய கால ஆராய்ச்சி இப்போது கிட்டத்தட்ட முடிவடைந்துவிட்ட தென்னலாம். இப்போது நமக்குக் கிட்டியுள்ள சங்க இலக்கியத்தின் மிகப்பெரும் பகுதி கி. பி. 2-3-ம் நூற்றாண்டுகளுக்குரியது. பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என வகுக்கப்பட்டுள்ள சங்க இலக்கியத்தில் அடங்காத சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இருகாப்பியங்களும் மற்றவற்றுடனொப்பச் சங்க காலத்தில் எழுதப்பட்டவையேயாகும். திருக்குறள் கி. பி. 2-ம் நூற்றாண்டுக்குக் குறைந்தது ஒன்றிரண்டு நூற்றாண்டுகட்கு முற்பட்டது. தொல்காப்பியம் திருக்குறளுக்கும் சிலபல நூற்றாண்டுகள் முற்பட்டதாதல் வேண்டும். தவிரச் சங்கத் தொகை நூல்களில் நூல்கள் சிலவும் நூற்பகுதிகள் சிலவும்; சிறப்பாகப் புறநானூற்றுப் பகுதிகள் சிலவும் பரிபாடல் பகுதிகளும் முத்தொள்ளாயிரம் முதலிய நூல்களும் 2-ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகவே இருத்தல்வேண்டும், சங்க காலத்திலும் பழமையுடைய இத்தொல் பழமை இலக்கியம் சங்க காலத்துக்கு முற்பட்ட இலக்கியப் பண்பாடுகளை விளக்க உதவுகின்றன.

காலஆராய்ச்சியையடுத்து இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத்தின் பின்னணியாக இலங்கும் நாகரிக ஆராய்ச்சி ஆகியவற்றில் இன்று புலவரும் ஆராய்ச்சியாளரும் முயன்று வருகின்றனர். சிந்துவெளிப் புதைபொருளாராய்ச்சி இவற்றுக்குப் பேரூக்கம் தருவதாயுள்ளது.

வரலாற்றாசிரியர்கள் காலப்பாகுபாட்டைப் பின்பற்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் காலத்தை முப்பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம்: அவை பண்டைக்காலம், இடைக்காலம், பிற்காலம் என்பவை. கி. பி. 3-ம் நூற்றாண்டு வரையுள்ள சங்க இலக்கியம் பண்டைக் காலத்தது. அதற்குப் பிற்பட்டுக் கம்பர் காலம் வரை அதாவது 12-ம் நூற்றாண்டு வரையுள்ள இலக்கியம் இடைக் காலத்தது. கம்பருக்குப் பிற்பட்ட இலக்கியம் பிற்கால இலக்கியம் ஆகும்.

இவற்றுள் பண்டைக்கால இலக்கியமாகிய சங்க இலக்கியம் தமிழுக்குத் தனிப் பெருஞ் சிறப்பளிப்பதாகும். ஏனெனில், வேத உபநிடதங்கள் நீங்கலாக இந்தியத் துணைக்கண்டத்தில் எம்மொழியிலும் இக்காலத்தில் இலக்கிய வாழ்வு இருந்ததில்லை. இரண்டாங்காலமாகிய இடைக்காலத்திலும் வடமொழி இலக்கியம் தவிர வேறு இந்தியத்துணைக்கண்டத்தில் தமிழோடொத்த இலக்கியம் இல்லை. வடமொழி, தென்மொழி என்ற பெயர்களுடன் வடமொழியும், தமிழ் மொழியும் போட்டியிட்ட காலம் இதுவே. மூன்றாவது காலத்தில் வடமொழி இலக்கிய வாழ்வு வடநாட்டில் அழிந்துபட்டது. இந்தியத்துணைக்கண்டமெங்கும், சிறப்பாகத் தென்னிந்தியாவில், தாய்மொழி இலக்கியங்கள் தலையோங்கின. இக்காலத்தில் தான் பிற தாய்மொழிகள் தமிழுடன் இலக்கியப் போட்டிக்கு வந்தன.

பண்டைக்காலம், இடைக்காலம், பிற்காலம் ஆகிய இம்மூன்று காலங்களிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்ற இலக்கிய மொழி தமிழ் மட்டுமே என்பதையும், வடமொழியும் பிற மொழிகள் யாவும் மூன்று காலங்களுள் ஒரு கால அளவே வளர்ச்சியடைந்தன என்பதையும் இதன் மூலம் தெளிவுபடக் காணலாம். தேச வரலாற்றுடன் வளர்ச்சியடைந்த இத்தேசீய இலக்கியத்தின் தாயிலக்கியம் சங்க இலக்கியமேயாகும்.

பழங்கால ஆராய்ச்சிக்கும் தேச வளர்ச்சி வரலாற்றுக்கும் உதவுவதுடன் நில்லாது சங்க இலக்கியம் தமிழர்தம் இலக்கிய வளர்ச்சிக்கும் பெரும்பயன் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று தமிழிலக்கியத்தின் எல்லையற்ற முழுப்பரப்பையும் தமிழகம் உணர்ந்து போற்றவில்லை. அதன்

(10-ம் பக்கம்)

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம்.ஏ., எல்.டி.

'வணங்காமுடியரசி'' அன்னை! வணங்கியே பிறந்தது பிள்ளை!

மரங்களுக்கு உணர்ச்சி உண்டு எனக்கருதும் வைதீக நெஞ்சு, மனிதனுக்கும் அந்த உணர்ச்சி இருப்பதாக எண்ணுவதில்லை. வேம்புக்கும், அரசுக்கும் விமரிசையாகத் 'திருமணம்' நடத்துவோர் வாலிபச் செல்வங்களை வாழவிட்டுப் பூரிப்பதில்லை. நெற்றியைச்சுழிப்பர்; நாக்கைத்துறுத்துவர்; நெஞ்சிலே கைவைத்து 'பார்க்கிறேன் ஒருகை' என்பர்.

பாண்டியன்-மறவர்குல மாணிக்கம்! வாலிபத்தின் விளிம்பிலே நின்று அலைமோதிக் கிடந்த அந்தப் பொற்கொடியை-பூவை மரகதத்தை உள்ளக்கிழத்தியாக்கிப் பின் இல்லக்கிழத்தியாக்கினான். 'அகநானூறு' தொடர்ந்தது. ஆனால் ஊரார் 'புற நானூற்றை'ப் புரட்டிக் கொண்டிருந்ததை மயங்கிக் கிடந்த சிட்டுகள் கவனிக்கவில்லை. விளைவு? பயங்கரம்!

நிகழ்ச்சி மிகச்சிறியது தான். நண்பர் 'இசையமுது' அந்த நிகழ்ச்சியைமையமாக வைத்து ஒரு சிறு கதையையே தீட்டிவிட்டார். படியுங்கள்! முடிவிலே நிச்சயமாக பெருமூச்சு விடுவீர்கள் (ஆர்)

★ ★

"புழுதிமேடு" பெண்ணையாற்றங் கரையில் அமைந்திருக்கும் ஒரு சிற்றூர். இரவு நேரம்-வானத்தில் மேகப் புழுதி படிந்திருந்தது. இரண்டு தினங்கட்குமுன்பு பெய்திருந்த மழையால் ஏற்பட்டிருந்த நசுநசுப்பு - கவிந்திருந்த இருளிடையே ஒளிவீசிப்-பறந்த மின்மினிப் பூச்சிக்கள் - தொலைவில் இருந்து கேட்ட ஆந்தையின் அலறல்-இவையத்தனையுமே ஒரு 'சோக நாடகத்திற்கு' அமைக்கப்பட்ட காட்சி மேடையாக இருந்தது.

அவள் வீதியில் நிறைபடிய, விண்ணை மறுமுறையும் நிமிர்ந்து பார்த்தாள்; அவளுக்குப் பின்னே மங்கிய ஒளியில் சிதைந்துபோயிருந்த குடிசை தெரிந்தது. இருள் உலகில், வீட்டில், அவள் உள்ளத்திலும்கூட!

ஏற்பட்டஆரவாரமும் பேரிரைச்சலும் அவளை நினைவுலகில் இறக்கியது; திரும்பிப் பார்த்தாள்.

தென்திசையில் எழும்பிநின்ற ஒளிக்குன்று. அவள் வாய் முணுமுணுத்தது "சீதை ராவணனோடு ஓடிப்போயிருப்பாள்."

"குறும்புக்காரி"

ஆமாம் அவள் குறும்புக்காரி தான். இப்போதல்ல ஓராண்டுக்கு முன்பு வரை.

அன்று அந்த சிற்றூரில் 'கூத்து.' 'ராமகாதையில்' ஏதாவது ஒரு பாகமாக இருக்கலாம். மாரியம்மன் கோயிலுக்குச் சற்று தொலைவில் இருந்த திடலில்தான் கூத்து நடைபெற்றுக்கொண்டிருந்தது; அங்கிருந்த விளக்கின் ஒளிதான் குன்றென உயர்ந்து நின்றதும், அங்கு கூடியிருந்த மக்களின் 'கலையுணர்ச்சிதான் 'ஆரவாரமாகவும் பேரிரைச்சலாகவும்' எதிர் ஒலித்ததும்.

ஊரே திடலில் கூடியிருந்தபோது இவள் மாத்திரம்? கூத்தை வெறுத்தவளல்ல, சிறு வயதில் கூத்து பார்க்க அவள் கொண்டிருந்த ஆவலும் அதற்காக ஒரு முறை 'வேற்றூர்' சென்று கூத்துப் பார்த்ததும், அந்த குற்றத்திற்காக தன் 'குடிகாரத்' தந்தையிடம் அடிபட்டதும் அவள் மறந்துவிடவில்லை. ஆனால் இனிப் பார்க்கமாட்டாள். கூற்று மாத்திரமல்ல, இந்த உலகத்தையே அவள் பார்க்க விரும்பவில்லை?

சென்ற ஒரு வருடத்தில் அவள் எவ்வளவு மாறிவிட்டாள், அவள் உடல் எவ்வளவு மாறிவிட்டது;

'நாற்பதை'க்கடந்தஅவளை'குமரி' என்று கூறமுடியாது, ஆனாலும் அவள் கடந்த கால உருவை-அவள் செயலை கவனித்தால் அவள் இழந்திருக்கும் இளமை மிக மிக அதிகம். அவள் குறும்பான பேச்சும் விறுவிறுப்பான செயலும் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு மறைந்து போனது.

வாழப்புகுந்த இடத்தில் வாங்கிய "வாயாடி" 'கேடுகெட்டவள்' - போன்ற பட்டங்களைப்போலவே பிறந்த ஊரிலேயும் "பெண்ணு இவள், பேய்" முதலிய பட்டங்களையும் பெற்றவள் அவள். அவள் வயதில், ஆண்பிள்ளைகள் செய்யாததை, செய்ய அஞ்சியதைக்கூட, அவள் செய்துள்ளாள். பனையாகட்டும் தென்னையாகட்டும் 'காய்' இருந்தால் அது அவளுக்குத்தான் சொந்தம். இரவு - பகல் அவள் அறியாதது. ஊரார் மரத்தில் 'பழம்' இருந்தால் 'ருசி' பார்ப்பது இவளாகத்தானிருக்கும்.

அப்படிப்பட்டவள்தான் சென்ற ஒரு வருடத்தில் அப்படி மாறிவிட்டாள். சோகத்தை சுமந்து சுமந்து அவள் முதுகுகூட வளைந்துபோனது. சென்ற வருடம் இதே நாட்களில்தான் அவள் 'மகன்' இறந்துபோனது. அப்போது ஏற்பட்ட அதிர்ச்சிதான் அத்தனைக்கும் காரணம்!

மணமாக வேண்டிய பருவம்-மணம்கூட 'ஏதோ'நடந்தது; அந்த மணமேதான் 'அவளை' பிணமாக்கவும் செய்தது,

பெற்றமனம் - துடிக்காதா? எண்ணத் தோன்றும். பாசம் மாத்திரமல்ல அவளை வேதனைக்குள்ளாக்கியது! அவள் இதயம் பேசுவது புரிந்தால் அவர்கள் தெரிந்துகொள்ளக்கூடும் அவள் நிலையை!

"என் மகன் சாகவில்லை-கொலை செய்யப்பட்டான்." இதயம் ஓயாது இதைச்சொல்லிக்கொண்டிருந்தது.

பாண்டியன்-அவள் மகன் - பள்ளிப்படிப்பு பெற்றதில்லை-ஆனாலும் அதைவிட ஆழ்ந்த அறிவு பெற்றவன். அவனது பட்டணவாசமும், அவன் பங்குகொண்ட 'இயக்கமும்' அவனை சிந்தனையாளனாக்கியது. அவன் ஏதேனும் பேசினால், கேட்கக் கூடுவர் மக்கள்-சிரிக்க சிரிக்கப்பேசி, அவர்கள் சிந்தையில் தனக்குச் சரி என்று பட்டதை புக வைக்க



அவன் முயல்வதுண்டு; அவன் கருத்தை மக்கள் விரும்பாவிட்டாலும் அவன் பேசும் முறை அவர்களைக் கவர்ந்தது. அவனும் கட்டாயப்படுத்தவில்லை. தானாக கனியட்டும் என்ற போக்கிலேயே போய்விடுவான்.

தம்பி - தங்கமானவன் என்ற பட்டப்பெயரை பெற்று அவன் உலவிய நேரத்தில்தான் 'போர்டர்-மாரிமுத்து' அந்த ஊருக்குக் குடியேறினான். அவன் குடியேறின ஒரு மாதத்திற்கெல்லாம் 'மரகதம்' அவன் மகள் குடியேறினாள் கைம் பெண்ணாக; மூன்று மாதம் கணவனுடன் - பின் அவன் போட்ட மூன்று முடிச்சுக்களையும் அவிழ்த்தெறிந்துவிட்டு வந்துவிட்டாள்.

மரகதம்-பாண்டியன், எப்படியோ இருவர் விழிகளும் சந்தித்துவிட்டன! 'அகநானூறு' படித்தனர். நிலைமையை 'சாடைமாடையாக' ஊரார் விழிகாண உதடு அசைய, முணுமுணுப்பு. 'அகவல்' நிலையில் இருந்து 'காவிய' உரு எடுத்தது; பாண்டியனின் அன்னையும் ஏதேதோ கூறினாள். பாண்டியனோ விளக்கவுரை நிகழ்த்தினான் "அகநானூறு தெரியும் அளவிற்கு புறநானூறும் அறிவேன் அம்மா" என்று கூறும் நிலை வரை சென்றுவிட்டான்,

இத்தனைக்கும் காரணம் - மாரிமுத்து-பாண்டியனின் சாதியில்லை-அவன் இனம்தான்! அவன் மகள் விதவை!

ஊருக்கு இவன் போக்கு பிடிக்கவில்லை. இவனுக்கும் ஊராரின் போக்கு சரி என்று படவில்லை;

'முணு முணுப்பிற்கு முற்றுப் புள்ளி-இந்த ஊர் நமக்கு வேண்டாம்!'இந்த முன்னுரையை அன்னையிடம் கூறிவிட்டு மரகதம் பின் தொடர, பாண்டியன் புறப்பட்டான்.

நகரத்தில் நண்பர் உண்டு, மணப்பதிவு நிலையமுண்டு, நமக்கென்ன? இன்று மணம்-நாளை அன்னையிடம் கூறுவோம், அவளையும் அழைத்துக்கொண்டு 'கிராமத்திற்கே' இறுதி வணக்கம் செலுத்தினான்.

இந்த எண்ணமுடன்தான் அவன் நடந்தான்.

இந்த அளவு வளரும்வரை மாரிமுத்து தெரிந்தும் சிலையானானோ அல்லது ஊமை மனம்கொண்டவனோ? ஆனால் யாதொன்றும் அறியாதவன்போலவேஇருந்தான்!

மணம் நடைபெற்றது, ஊராரின் மனதிலே தீ மூண்டது; 'எத்தனை இறுமாப்பு-நம் முகத்தில் கரி அவள் முகத்தில் 'மஞ்சளா'? ஏனோ அவர்கள் இதயம் அவ்வளவு துடித்தது! ஆணவத்தை அடக்க, அழுந்துபடும் ஊர் கட்டுப்பாட்டை காக்க-சாதியை புதுப்பிக்க அவர்கள் முடிவு செய்தனர்.

★

முன் இரவு மரகதமும், பாண்டியனும் மணம் முடித்து நடந்து கொண்டிருந்தனர். சவுக்குக் காடு. அதைத் தாண்டியான பிறகு பயமென்ன? பாண்டியன் எண்ணியது இதுதான்-ஆனால்?

திடீர் தாக்குதல்! பாண்டியன் தாக்கப்பட்டான். முதல்அடியிலேயே மூர்ச்சையாகிவிட்டான். அடுத்து நடந்தது 'சூர்ப்பனகை' வதைப் படலம்!! ஆமாம் 'மரகதம்' களங்கப்படுத்தப்பட்டாள்,

பிணம்போல, மகனை கொண்டு வந்து போட்டபோது, அவன் அன்னை கதறிய காட்சி! அப்பப்பா! மாவீரன் என்று நினைத்திருந்தாளே அவனே தாக்கப்பட்டான் என்றால்? பெற்ற வயிற்றில் பேரின்பமா சுரக்கும்?

ஊமைக்காயம் உடல் முழுவதும், நல்ல அடி, மூன்றுநாள் உணர்வில்லை; விழிதிறப்புக் கிடையாது. அந்த மூன்று நாளிலேயே 'அவள்' எவ்வளவோ மாறிவிட்டாள். உள்காயம் ஆறவில்லை. உடல்தேறு முன்பே 'டைபாயிடு'வேறு அவனைத் தாக்கியது! கேட்கவா வேண்டும். இரண்டு வாரமும் அவன் நரக வேதனைப்பட்டான். ஏதேதோ பேசினான், சமுதாயத்தைகண்டித்து மதத்தை மாய்த்து! இப்படி பேச்சு பல திக்குகளிலும் செல்லும்.

மரகதம் - இருந்தால்தானே-அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் எங்கேஊருக்குள்வந்தாள்? அவள் தந்தைகூடத்தான் இப்போது அந்த ஊரில் இல்லையே!

மரணமாளிகைக்கு மகன் நடைபோடுவதை அவள் கண்டாள்; ஏதோதோ செய்தாள். கடைசியில் அன்று இரவு அவன் இறந்து போனான், இறந்தா போனான், கொலை செய்யப்பட்டான். அப்போது அவள் உள்ளத்தில் எழுந்த எண்ணம் இதுதான்.

அடிக்கடி அவனை, அவள் நினைத்துக்கொள்வாள். அவன் நினைவு வந்தால் உடனே அவன் படுக்கையில் கூறிய சொற்கள் நினைவிற்கு வந்துவிடும். அது நெருப்பாகி எரிக்கும் அவளை.

"என்னம்மா அங்கே சத்தம்."

"மாரியம்மன் கோயில் வேப்ப மரத்துக்கு பக்கத்திலே ஒரு அரசங் கண்ணு."

"முன்னே இருந்தது?"

"பட்டு போயிட்டுது; புதிசா வைக்கிற மரத்துக்கும் 'கல்யாணம்' நமக்கும் தம்பி அதுக்குள்ள உனக்குக்கூட?"

"எம்மா பட்டுப்போன மரத்துக்குப் பதிலா புது மரம் வைக்கறவங்க எம்மா மரகதத்தை நான்?"

"தம்பீ பேசாமே தூங்கப்பா."

"அம்மா அந்த வேப்பமரம்கூட விதவைதானேம்மா, மரகதத்தை போல!"

இந்த சம்பவத்தை அவள் எப்படி மறக்கமுடியும்? யார்தான் மறக்கமுடியும்? எத்தனையோமுறை அவள் தன் மகனை நினைத்துக்

(8-ம் பக்கம்)

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

பந்த் பாடிய சிந்து

அசட்டை செய்தனர் !

அலட்சியப்படுத்தினர் !

காங்கிரஸ் மகாசபை எங்கே, கடுகத்தனை இயக்கமெங்கே என கேலிப் புன்னகை புரிந்தனர் !

இவை அத்தனையும் நடிப்பு என்று இப்போது விளங்குகிறது. காங்கிரசார் மன்றமேறிய பின்பு 'காலத்தின் மாண்பினைத்தான் மக்களுக்கு உணர்த்தி வந்திருக்கிறார்கள். வாழ்க ? அவர்கள் ?

''மத்திய ஆட்சியைப் பலவீனப்படுத்தும் சக்திகள் தென்னாட்டில் இருக்கின்றன.

'' அந்த சக்திகள் ஆபத்தானவை. அந்த ஆபத்தான சக்திகள் தேசீய மொழியான இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்கின்றன.''

உரத்த குரலில் பேசி, எதிர்த்து நிற்போரை அடக்கிட நினைக்கும் டில்லி பீடத்தின் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் இவ்வாறு வழக்கம்போல 'கர்ஜி'த்திருக்கிறார் மைசூரில் ! மந்திரியார் யாரைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் என்பதை கூடியிருந்த மக்கள் புரிந்துகொள்ளக் கூடாது என்று கருதி, நம்மைப் பெயர் கூறாமல் தாக்கினாரோ, அல்லது வரலாற்றையும் படித்து, மனச்சான்றுக்குப் புறம்பாக நடக்கும் நாம், ஏன் அந்தப் புனிதமான விடுதலை இயக்கத்தின் பெயரைச் சொல்ல வேண்டும் என்ற நன்னோக்கத்தோடு நமது பெயரைக் குறிப்பிடாமல் சாடினாரோ தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தை மனதிலே வைத்துக்கொண்டு பொதுப்படையாக தென்னாட்டு இயக்கங்கள் என்று பேசியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மைசூர் மாநிலத்து மக்களுக்குத் தெரியாது என்று பந்த் கருதியிருந்தால், நிச்சயமாக அவர் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டவராவார்.

கழகத்தின் சார்பு இல்லாத, ஆனால் கழகத்தின் இரண்டொரு முக்கியஸ்தரை மட்டும் வைத்து நடத்திய குறள் மாநாடு பெங்களூரில் நடைபெற்ற மகிமையை மந்திரி அனுமந்தையாவைக் கேட்டுப் பார்த்திருக்கவேண்டும்.

மத்திய சர்க்காரை பலவீனப்படுத்தும் சக்திகள் தென்னாட்டில் இருக்கின்றனவாம் ! 'சக்திகள்' என்று குறிப்பிட்டிருக்கிறார் உள்நாட்டு அமைச்சர். மகிழ்ச்சிதான். வஞ்சகமுள்ள வைரி, எதிரியை சக்தியுள்ள இயக்கம் என்று குறிப்பிட்டிருப்பது, பத்துமடங்கு குறைத்து மதிப்பிட்டதாகத் தானிருக்கும். வைரி புகழும் அந்த அளவுக்கு நாம் சக்தி பெற்றிருக்கிறோம். இப்போது ஆயிரத்து முன்னூறு கிளைக் கழகங்களும் நம் மனக்கண்முன் தோன்றி மறைகின்றன.

புகழக்கிடைக்காதவர் புகழ்ந்துவிட்டார், நம் சக்தியை மதித்துவிட்டார் என்பதால் அல்ல, நமக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சி. நாம், யாருக்கு, நமது சக்தியை உணர்த்துவதற்குத் துடித்தோமோ, அவர்கள் தம்மைப் புரிந்துகொண்டுவிட்டார்கள்; நமது இலட்சியத்தை விளங்கிக் கொண்டுவிட்டார்கள். ஆனால் நமது அடிப்படைத் திட்டத்தை மட்டும் புரிந்துகொள்ளாதவர்களைப்போல நடித்திருக்கிறார்கள். 'தேசிய மொழி' என அவர்கள் பெயரிட்டழைக்கப்படும் இந்தி மொழியை வைத்து மட்டும், பந்த் இவ்வாறு சீற்றம் கொள்ளவில்லை; நமது சட்ட திட்டப் புத்தகத்தையே மொழி பெயர்த்துத் தெரிந்துகொண்டு ஆத்திரப்படுவதுபோலப் பேசியிருக்கிறார். ஆனால் தெரியாததுபோல அரசியல் நளினத்தைக் கையாண்டிருக்கிறார். அரசாங்கத்திலுள்ள முக்கியஸ்தர்களுக்கு அரசியல் நளினம் தேவைதான். ஆனால், அந்த அரசியல் நளினத்தை கையாண்டால் வெற்றிபெறக் கூடிய பிரச்சினைகளில் மட்டும்தான் அவைகளைக் கையாளவேண்டும். நமது இனமுழக்கத்தினிடம் பந்தின் அரசியல் நளினம் படுசூரணமாக்கப்பட்டுவிடும். காரணம், நாம் காட்டும் சான்றுகள் வரலாற்றுச் சான்றுகள்; பந்த் படித்து, பாடம் செய்து, பரீட்சையில் வெற்றிபெறுவதற்கு உதவிய உண்மைச் சான்றுகள். அவைகளை நளினத்தால் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. எதிர்காலத்தில் காங்கிரசுக்கு மக்கள் தலைவணங்கி, மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபட்டதுதான் அந்தக் கட்சி என எண்ணவேண்டுமானால், தென்னாட்டுக் குரலுக்கு செவிசாய்த்து, ஆவன செய்து திராவிடத் தனியரசு நிறுவுவதைத் தவிர வேறு வழியில்லை. எப்போதுமே மிரட்டலுக்கு அல்ப ஆயுசுதான். பந்த் இதை அறியாமலில்லை. அறிந்ததை செயலில் காட்டவேண்டும்.

நாங்களும் நீங்களும்

'ராஜதண்டனை' குறைந்தஅளவே, இந்த வாரமும் இடம் பெற்றிருக்கிறது. இதுபற்றி, நீங்கள் குறைப்படுகிறீர்கள்,— படுவீர்கள் என்பது எங்கட்குத் தெரியும். போனவாரம் முதல் நமது ஆசிரியருக்கு கடுமையான சுற்றுப்பயணம். காலையிலே திருச்சி திருமணம், நடுப்பகலிலே மன்னார்குடிக் கூட்டம், மாலையிலே மாயூரம் பொதுக் கூட்டம். இப்படியாகச் சுற்றுப்பயணம் தொடங்குகிறது. 'வள்ளுவன் மூத்தோன்' பகுதியும், மற்றவையும் அடுத்த வாரம் இடம் பெறும். இதுபோன்று சில சமயங்களில் நேரும் 'விபத்துக்களை, நண்பர்கள் மன்னிக்கும்படி அன்பு காரணமாக வேண்டிக் கொள்கிறோம்.

'கம்யூனிஸ்டுகளின் வரலாற்று அறிவு' என்ற தலைப்பிலே இந்த இதழில் வெளிவர இருந்த கட்டுரை , பன்மொழிப்புலவர் அவர்களின் சங்க இலக்கியம் பற்றிய கட்டுரையின் நீட்டத்தால் வெளிவர இயலவில்லை. அது, 'கம்யூனிஸ்டுகளுக்கு வரலாற்று அறிவு' என்கின்ற தலைப்பில், பாடம் சொல்லித் தருகின்ற தன்மையில், இந்தக்கட்டுரைமுடிந்ததும், பன்மொழிப் புலவர் அவர்களாலேயே எழுதப்படும். ஆரியர்கள் தி. மு. க. வின் கற்பனையிலே உள்ளவர்கள் என்றும், திராவிடம் சரித்திரத்திற்குப் புறம்பானது என்றும் கூறும் கம்யூனிஸ்டுகளின் கூற்றுக்கு, அது விவாத முறையில் பதில்தந்து, கம்யூனிஸ்டுகளின் மனதையும் திருப்புமென்று எதிர்பார்க்கலாம்.

1-10-55-ம் தேதியன்று, இலக்கியப் போட்டிகள் நான்குக்கு,மான முடிவுகள் 'தென்றலில், வெளியிடப்படும். அது பற்றிய மற்ற விபரங்களும் அதே இதழில் வெளிவரும்.

1-10-55-ம் தேதிய இதழிலேயே 'வேலங்குடித் திருவிழா' நிச்சயமாகத் துவங்கும். பல புது அம்சங்களும் அதே இதழில் துவங்கும். 'கல்லக்குடி மாகாவியம்' அடுத்த இதழில் வெளிவரும்.

இன்னொன்று ; தென்றலை புத்தக அளவில் வெளியிடுமாறு, பல நண்பர்கள், நேரிலும், கடித மூலமும் கோரியுள்ளனர். அப்படிச் செய்யலாமா? செய்யலாம் என்றால் எந்த அளவில் ? எப்பொழுது முதல் ? என்ற சகல விஷயங்களையும், அருமைச் சகோதரர்களாகிய உங்களிடமிருந்தே எதிர்பார்க்கிறோம். கடிதமூலம்-கார்டு போதும் அதனைத்தெரியப் படுத்தக் கோருகிறோம்.

நிர்வாகி

சென்னைத் தோழர்கட்கு

சென்னை நகரில், பொதுக் கூட்டங்களுக்கு நாள் குறித்துக் கொள்ள வரும் தோழர்கள் அன்பு கூர்ந்து சென்னை மாவட்ட தி. மு க. செயலாளரிடம் ஒப்புதல் கடிதம் பெற்று வரக்கோருகிறேன். மாவட்டச் செயலாளரிடம் கடிதம் பெற்று வராத கூட்டங்களில் கலந்து கொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கண்ணதாசன்.

★ ★

வெண்பாப் போட்டி 16.

★

இரட்டைப்புலவர் முறை :

கற்பழித்துப் போன கடவுளெலாம் உங்களிடம்
இப்பொழுது வந்து இடம்கேட்டால்...

முடிவு தேதி 17-9-55.

முகவரி :—
வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6.

உள்ளத் தடத்திலே...

ஆழ்கடல் முத்தின் இயன்ற தாழ்வடம் ஏந்தி உனது வாயிலில் வந்தேன். அடைத்த நெடுங்கதவம் அசைவற்று நின்றது. அரசமரமொன்றின் நிழலிலே பார்ப்பொடு திரியும் கோழியின் கூட்டம் இரை பொறுக்கிக் கிடந்தது. இலைகளின் உயிர்ப்பிலே ஆயிரமாயிரம் எண்ணத்திரள்கள் உருப் பெற்று எழுந்தன.

பரிசைக் கொடுக்கக் காத்திருந்தேன்! பொழுது பறந்து கொண்டிருந்தது; நின் பெயர் கூறி நின்றேன்! பலகணி வழியாக நின் பால் முகத்தைக் காட்டினாய். முத்துக் கோவையை உயர்த்தி உனது முத்த நகையை நோக்கி மெய் மறந்து நின்றேன். நீயோ!... வெறுப்புக் கோடிட்ட நின்பிறை நுதலால் எனக்கு விடையிறுத்து மறைந்து விட்டாய், அந்தச் சாளரம் வறிதே கிடக்க விடுத்து! என் பரிசின் பரிசு இத்தன்மையதா? அரிவை முயக்கம் வேட்டு, தெரிழை வாயில் வந்தால் புருவ முறிவு செய்யின் நான் உய்வகை காண்பதெப்படி?

அன்றொரு நாள்...!

பெருமலையின் பின்புறத்தே, அந்தி இளம்பிறையின் அழகுக்கு நாணி பரிதி முகம் புதைத்த போது...!

நீ என்னை அழைத்தாய். நானும் வந்தேன். நிலா முற்றத்தில் துலங்கிய பளிங்கினால் செய்த மேடை மீது, நீ அழைத்தாய்-அமர்ந்தாய். அழகு மிளிரும் உன்றன் நீளிரு விழிகளின் பேச்சிலே, அந்த உன் உடலின் துடிப்பிலே, பவளம் புறம் போகும் மெல்லிதழ்க் கனியிலே என் உள்ளம் பறி கொடுத்து வெற்றுடலாய் வெய்துயிர்த்தேன்! அருகில் வா வென்றாய்! துணிந்து நான் முன்னடி பெயர்க்கையிலே, என் ஆசையின் கட்டெல்லாம் துணிக்குமோர் முனிவுன் முகத்திலே கனலக் கண்டேன். காதல் தழல் தணிக்க உன்னைக் குறுகினால், சினத்தின் அழல் தந்து என் மனத்தை மருளடைய வழி தேடி விட்டாய்! "குற்றம் என்ன" என்று என் கண்கள் இரந்தன. இரந்த என் விழிகளிலே என்னுள்ளத்துட் கரந்த ஏக்கமெலாம் பரவிக் கிடந்தது. "நம் அன்பின் உருவொன்றை தெரியக் காட்டுதி. இன்றேல் எனை விடுத்து ஏகுதி" என்றாய், செய்வகை அறியாது கையுறவுற்றேன்! காலமோ, கடந்தோடுகிறது.

அலைகடல் கடந்து நான்வேறு புலம் பெயர்கின்றேன். பனி கடலுள் பாய்தோய்ந்த நாவாயில்... தனித்திருந்து தளர்வுற்றேன்! வெகு தொலைவுக்கு அப்பால், ஆழியின் கரையில் நீ நின்று கொண்டிருக்கிறாய். நீரினால் பிரிக்கப்பட்டும் அன்பெனும் நீர்மையால் பொருத்தப் பட்டிருந்தோம்! இறுகப் பிணைத்து நெருங்கி வாழின் தெறுவுறுதல் இலாத நம் தொடர்பு, விட்டு விலகி எட்ட ஏகினால் துயரெனும் கங்கு தூவி சுட்டெரிக்கிறதே! என் செய்வது? உள்ளத்தால் உன்னைப் பற்றிப் பிணைந்தேன்: இன்று உடல் பற்றி உலர்கிறது. இரவிலே தென்றல் என் டலை வருடிப் போகிறது. நலம் செய்ய முனைந்து பொல்லாங்கு ஆற்றும் அதைக் கண்டு இரங்குவதா அன்றிச் சீறுவதா? காலக்கடல் முன்பு நாம் ஆடிய ஆட்டமெலாம் நினைக்க நினைக்க இனிக்கின்றனவே! சற்று கடந்து செக்கர் வானம் சிரித்த போது.. நாணத்தால் என்னை நீ நண்ணவில்லை!

பக்குவத்தின் பேரழகு தத்தித் தவழ்ந்த நம் உணர்வின் ஊக்குதலிலே, எண்ணரிய கனவுகள் ஊற்றெடுத்தன நம் உள்ளங்களில்! அவை தொட்டுக் காட்டிய இன்பக் கூடங்கள் அழியாமையின் அழகுப் பரிசுகள். நம் 'காதல் நினைவுகள்'- நடமாடும் கனவுகள் தரும் அல்லல் உணர்விலே நாம் அளவிலா இன்பம் அடைவோம்.

குளத்தின் கரையில் குளிர் நிழலில் முகை யவிழ்ந்த செந்தாமரையின் முகம் நோக்கி அமர்ந்திருந்தோம். கரை மருங்கு ஆடிய முல்லையின் மலரை நின் வல்லிருட் கூந்தலில் சூடினேன்.

பரிசுக்காக நாணி நீ நகை முகம் கைகளில் புதைத்தாய். சுடர் காணும் அதன் அழகிற்கு நாம் ஈடில்லை என உரைப்பன போல், அலைநீரின் அசைவிலே தலையாட்டி நின்றன அம்மரை மலர்கள்!

குறுநகையாடி கரையில் கொழித்தது சிற்றலையின் வண்ணத்திரள்! அப்போது நான் உன் வண்ணத்தின் மேன்மையைப்பற்றி எண்ண மிட்டுக் கொண்டிருந்தேன்.

நீலவானம்,பரந்த அதன் வெளியிலே பூத்துக்கிடந்தன பாலொளி வடிக்கும் வெள்ளிகள். கனிவும் பணிவும் தேங்கிக் குழைந்த உன் கண்கள் . . . என்னை வாவென்று அழைத்தன. ஆசை மதுவளித்த உன் இதழ்கள் அமிழ்தின் சுவையை என் உள்ளத்திலே வடித்தன. உன் மேனியின் மினுமினுப்பிலே மனமயங்கி நின்றேன்! அருகில் சென்றால் . . . உன் விழிகள் பைய நிமிர்ந்து என் கண்களிற் படிந்தன. அவற்றின் ஆழத்தில் நீரிட்டுத் துளிர்த்தது பெண்மையின் மென்மை. அணைக்க நினைந்துஅருகில் வந்தேன். ஆனால் இணங்கிய உன் நெஞ்சம் பிணங்கிச் சென்று விட்டது.

என் காதலியின் கருவிழிகளில் கனிவிருப்பது அன்பின் அருமை அங்கு அணைந்திருப்பதால் அல்லவா? அவள் இதழ்களின் வண்ணம் பூவின் மென்மையினும் மேம்படுவது, மலரினும் மெல்லிய அன்பின் சொல்லை அவை மிழற்றுவதால் அல்லவா?

நங்கை நெற்றியின் விளக்கம் கற்றைக் கதிரை வடிப்பதேன்?

அறிவு படிந்த பீடத்திலே சுடர் செறிவது இயல்புதானே!

முகையவிழும் என்றன் முகமலரின் முருகொளியால் முகமன் பெறுவதால் தான் அவளது நகை முத்த நலம் மிகைப் படுகிறது. 'யான் நோக்குங்கால் நிலன் நோக்கி மெல்ல' அவள் நகுவது ஏன்?

மண்ணிலே பிறந்த தான், மண்ணின் செல்விக்கு, பெண்மையின் கலனும் நாணம் தன் விழிகளில் படிந்த தன்மையைக் காட்டுகின்றான் போலும்!

அவளது அழகைக் கண்டு வெட்கி, வானத்து முழுமதியம் தெருமருந்து தேய்கிறது! பின் அது உயர்ந்து வளருவதேன்?

மீண்டும் முழு நிலவாகி அவள் எழில் நலத்தை அடைய முயலுகிறது. இருந்தும் ஒப்புவமை இல்லாததால் பெயர்த்தும் தேய்கிறது. முயற்சியால் தன் கவற்சியைப் போக்க வழி தேடுகிறது. ஆனால் அது தன் இகழ்ச்சியால் பண்டையோர் மொழியெல்லாம் பொய்யாக்குவதைப் பற்றி யாதொன்றும் அறியாதிருக்கும் பேதமை தான் என்ன!

நீலவானிலே நிலவுகின்ற நறை நிலா, மின் வடித்த நின்னுடலிலே வாள் வடித்த வண்ணக் கதிர்கள் தேன்மடுத்து மின்னும் போது, கட்டிக் கரும்பனைய உன்னைத் தொட்டுத் தழுவி இன்பப் போதரும்ப போது நோக்கியிருந்தேன். நகை நிலா நாண நகை நலம் நண்ணியது. நின் முகையிலா முறுவல் பூத்திட்டால்.

உள்ளன்பு உவ்வி நான் உள்ளன்பு உருகினேன். அருகே அணைந்தால் முளிதயிர் பிசையத் தளர்வுறும் விரலால், தளிர் முகம் புதைத்தாய், உள்ளப் புதையலை நின் கண்கள் கூறுவாறு கள்வமாய்த் தடுக்க. முகமும் கண்ணும் மறைத்தாய், என் அகத்திலே மன்னிய அன்பை நிறைத்தாய்!

உனக்குள்ளேயே எவ்வளவு வேற்றுமை மாறுபாடு? கண்களின் கறுமையும், கண்ணே வழியாய்க் கண்டவரைக் கொள்ளும் உன் உள்ளத்தின் வெண்மையும் வேறுபட்டவையல்லவா? பெருத்த மார்பிடத்தைப் பொறுத்து நிற்கும் இடை சிறுத்திருப்பது, பொறுமையும் பொறுமை பெற்ற பெருமையும் உன்னையுற்று உறைவதால் அல்லவா?

நீ மிகவும் கொடியவள்!

பார்ப்பவரைப் பேதுறுத்தும் உன் உருவை அணைய அணைய அணையா வேட்கைதந்து போதுமென்ற பொன் செயும் மனத்தை எம்மிடமிருந்து நீ பறித்து விடுகிறாயே?

நீ பிரிந்த போது.

மாலைமருவிய காலம் நினைந்து மாலை வெருவிய தென்னுள்ளம்! குலவி நாம் நிலவாடிய நற்பொழுதைக் களவாடிய நின் பிரிவு நிலவோடிய காலையை நலங் கூடிய வேலையாக்கி விட்டது. கூடிய நாளினும் நீடிய நாளினும் என் கண் மூடியதில்லை. இன்று நான் கண்ணிருந்தும்,என் கண்விழிதிருந்த உன் கண் விழி அருந்தும் பேறு பெறவில்லையே நான்?

அன்று நீயும் நானும் பற்பல பேசியிருந்தோம்! வாய் வழி வழங்கிய வாய்மை உரைகளும் கண்வழி பண்ணிய கன்னல் மொழிகளும், மெய்வழித் துலக்கிய உய்வழி நிலைகளும் எத்தனை எத்தனையோ?

அன்றொரு நாள் . . . வைகறை விழித்த பொழுது காலையிளம் பரிதியிலே அசைந்துவந்தாய். நானோ ஏக்கத்தில் உருக்குலைந்து மயங்கி நின்றேன்! ஆகா! தென்றல் அசைவன்றோ அவள் வருகை! வருவாள் என்னிடமன்றி ஆ! செல்கிறாளே கடைக்கண் காட்டாமல், என்னைப் பார்க்க வில்லையோ? இல்லை!

தமிழ்ப்பித்தன்

தெரிந்துதான் செல்கிறாள். அந்தி வானத்தின் அந்தியிலே முந்தியிருப்போம் விந்தையிலே என்று கூறினாளே "வருகிறேன்" என்ற பொழுது "அந்த வல்வரவை வாழ்வார்க்குரை" என்றவளா செருக்குடன் செல்கின்றாள்! "இன்பத் துள்ளலிலே திளைத்திட்ட கிள்ளையாவோம்" என்றாளே! அத்தனையும் செருக்கென்னும் வெள்ளம் கொள்ளை கொண்டதோ?

கண்ணீர் உகுத்துக் கதறி நின்றேன். காலம் வெகுதூரம் பறந்து விட்டது.

காரிருள்நேரம்-புட்கள் எல்லாம் இன்துயிலைக் கொண்டிருக்கும் நேரம்-இமை மூடிச் சாக்காட்டில் உலவுகின்றார் மக்கள். வரிவண்டின் ரீங்காரம் இல்லை-பாழ் அமைதி.

பின் நிலவு வான் நழுவிச் செல்லும். எங்கும் பனி பெய்யும் சாரல் நோக்கி நனி துன்பத்தோடு நான் நடந்தேன். உயிர் பிரிந்த பிறகு உடலுக்குக் குழிதானே புகலிடம்? புன்துயிலைக் கொண்டு உள்ளம் புரை போகக் காதலுக்கு ஏங்கிச் சாவேன்.

முந்தை நாளில் ஆடிப்பாடி எனைக் கூடி முயங்கி இன்று வாட விட்டு வெகுதூரம் சென்று விட்டாள் அந்த வனிதை. நைந்து போகாவிட்டாலும் அந்தக் கனி என்னை-என் உள்ளத்தை நொந்து போகச் செய்து விட்டது!

காலப்போக்கிலே உனைக் கண்டு பிடிப்பேன்! இன்னும் எத்தனை ஆண்டுகள் நான் காத்திருக்க வேண்டுமோ?

விற்பனையாகிறது!

ஆத்தான்

தென்னரசு எழுதிய
புதிய நாடகம்

விலை ரூ 1—0—0.

நீலா நிலையம்

2-127, மவுண்ட்ரோடு,
சென்னை-6

அமைச்சரின் அபயக் குரல்!

— சிவம் —

"டேய்!! நீ, எங்க தெருப்பக்கம் வா. உன்னே கவனிக்கிறேன்.

நான் தனியா மாட்டிக்கிட்டேன் அடிச்சுப்புட்டே! என்னிக்கி இருந் தாலும் உன்னே சும்மாவிடமாட் டேன் ஆமாம்! . . ம் "

சாலே ஓரங்களிலும் சந்து முனே களிலும், சிறுவர்களுக் கிடையே நடைபெறும் 'அடி தடிகளே' நீங் கள் பார்த்திருப்பீர்கள். பத்து அல் லது பதினைந்து சிறுவர்கள் சேர்ந்து ஒரு சிறுவனே சக்கையாகப் பிடித்திருப்பார்கள். அடிபட்ட சிறு வன் வேதனையைத் தாங்கிக் கொண்டு நாம் மேலே குறிப்பிட் டிருப்பது போன்ற சொற்களே தட் டுத் தடுமாறி கூறிக்கொண்டே போவான்.

தான் பட்ட தொல்லேயைத் தன் தெருவில் குடியிருக்கும் தனது நண்பர்களிடம் சிறுவன் கூற நேரிட் டால் அங்கே ஒரு புதிய படை யெடுப்புக்கு ஆயத்தங்கள் நடை பெறும். அடிபட்ட சிறுவனுடைய நண்பர்கள் உடனே சென்று 'எதி ரிக்' கூட்டத்தை நாசமாக்க வேண்டு மென்றும், அதையும் உடனேயே காரிய மாற்றி எதிரிகளுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்றும் யோசனே கூறுவார்கள்.

பக்கத்துத் தெருவில் தனது உடலேப்பதம் பார்த்தவர்களின் 'மிமை'யும் வலிவும் எவ்வளவு என்பதை அறிந்து வந்த சிறுவன், "இப்பவேண்டாம், நம்பளேயெல் லாம் கையாலாகதவனுங்கன்னு அவனுங்க எண்ணிக்கொண்டிருக் கானுங்க. நம்ம பலத்தைக் காட்ட இது நேரம் இல்லே! என்னிக்காச் சும் அந்தப்பயல்கள் இங்கே வரும் போது நாம் வளேச்சிக்கலாம். நம்ப "யாருன்னு அப்பகாண்பிக்கலாம்" என்று ஆறுதல் கூறுவான். பிறகு அந்தப்பிரச்சினே அத்துடன் அடங்கி விடும். இது நாட்டிலே நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளில் ஒன்று.

இப்படி ஒரு நிகழ்ச்சி தென்னுட்டு அரசியலில் நடை பெற்றிருக்கிறது. சென்னே சட்டசபையின் நிதி அமைச் சரும் கோவைநகரத்துக் கோமானு மான சுப்பிரமணியம் அவர்கள் பேசியது மேற்கண்ட நிகழ்ச்சி ஒன் றைத் தான் நமக்கு நினைவூட்டு கிறது. சிறுவர்களிடையே நடை பெறும் நிகழ்ச்சி என்றுலும் நாட்டு அரசியலில் காணப்படும் போக் கினே விளக்கப் போதுமானதாக இருக்கிறது. அதன் காரணமாகவே நாம் சிறுவர்கள் பிரச்சினேபற்றிக் கூற நேர்ந்தது. வேறு யாரையும் இகழ வேண்டுமென்று கூற வில்லே.

அண்மையில் நடை பெற்று முடிந்த சென்னேசட்டசபைக் கூட்டத் தில் இரண்டாவதுஐந்தாண்டுத் திட் டத்தில் சென்னேயின் பங்கைக் குறிப்பிடும் 'காகித திட்டம்' பற்றி விவாதிக்கப்பட்டது. அப்போது காங் கிரஸ் சர்க்கார் தயாரித்துள்ள திட் டம் சென்னேக்கு நன்மை பயக்கும் திட்டமல்ல என்பதைப் பலர் எடுத் துக் காட்டினுர்கள். சென்னேயை புதுடில்லி ஏமாற்றி விட்டது.

முதலாவது ஐந்தாண்டு திட்டத் தில் சென்னே புறக்கணிக்கப்பட்டது. இப்போதும் அதே கதிதான்!

வடக்கேயுள்ள மக்களின் வாழ் வுக்குத் தேவையான வற்றைக் கவ னித்த பின்னர் தான் சென்னேயை டில்லி கவனிக்கிறது.

இமயமுதல் குமரி வரை ஒரே நாடென்று பேசும் காங்கிரஸ் ஆட்சி 'செய்யும் போது மலபார் மாவட் டத்திற்கு வஞ்சனே செய்தனர்.'

என்று பலவாறு சென்னேயின் திட்டத்தை எதிர்த்துப் பேசியோர் கூறியுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்த வராகிய நாம், புதுடில்லியில் ஆட்சி செய்யும் நேரு சர்க்கார் தனது நோக்கத்தை விந்தியத்திற்கு வடக்கே நீட்டுகிறது, பாசக்கயிற்றை திராவிடத்தின் மீது வீசி 'சுரண்டல் ஆட்சி' நடத்துகிறது என்று எடுத் துக் காட்டி வருகிறோம்.

'ஐந்தாண்டுத்திட்ட கண்டன நாள்' நாம் நடத்திஞேம். இந்த நாட்டிற்கு வடக்கத்தி ஏகாதிபத் தியம் இழைத்துள்ள கொடுமைகளே எடுத்துச் சொன்ஞேம். முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் செலவு செய்யப்பட்ட பணம் பூராவும் வடக்கு வாழவே பயன்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டினேம். நமக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு மக்கள் வேதனேப் பட்டனர்.

சென்னேயில் ஆட்சி செய்யும் காம ராஜர் சர்க்கார், நமது பிரச்சாரத் தைத் தடுக்க எண்ணினுர்கள். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத் தை தயாரித்து மக்கள் முன் நீட்டி னுர்கள். "நானூறுகோடிக்குத் திட் டம், நாட்டுக்கு நல்லது செய்யும் திட்டம், நெய்வேலி நிலக்கரியை, தங்கமாக்கும் திட்டம், நேருவின் ஆட்சி தரும் பரிசு, பாரீர்! பாரீர்!" என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்தனர்.

சென்னே சர்க்கார் தயாரித்த திட் டத்தை புது டில்லி ஆட்சி ஒப்புக் கொள்ள வில்லே. ரூ-400 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திட்டம், ரூ-200 கோடிக்கு குறைக்கப்பட்டு விட்டது.

தாங்கள் தயாரித்த திட்டத்தை ஒப்புக்கொள்ளமறுத்த நேருவின் ஆட்சியை காமராஜர் சர்க்கார் கண் டிக்க வில்லே. எதிர்க் கட்சிக்காரர்க ளிடம் வீரம்பேசி புது டில்லி நோக்கி நடந்தார்கள். கவிழ்ந்த தலேயுடன் சென்னேக்குத் திரும்பி னுர்கள்.

இந்த ஒரு சம்பவம் நேருவுக்கு புது டில்லியிலுள்ள அதிகாரம் எப் படிப்பட்டது என்பதை சென்னே அரசியலாருக்கு யெடுத்துக் காட்டி யிருக்கும்.

"பவதி பிச்சாந்தேகி! என்ற நிலேயில் இருப்போர் யார்-கை நீட்டி நிற்போர் யார், ஆதிக்கம் செலுத்துவோர் யார் என்பதை சென்னே சர்க்கார் உணர்ந்திருப்பர்.

தங்கள் திட்டத்தை ஒப்புக் கொள்ளமறுத்த டில்லி ஆட்சியிடம் எதிர்த்து ஒரு 'சொல்'பேசத்திறமை யும், மனவளமும் இல்லாத சென்னே காங்கிரஸ் அரசு, தனது தோல்வியை மக்களிடம் ஒப்புக் கொண்டு நிலேமைக்கு விளக்கம் கேட்டிருக்க வேண்டும்.

ஆனுல்! காமராஜர் சர்க்காரோ 'உப்புக்கண்டம் பறி கொடுத்த'... போல் வாய் மூடி மௌனியாக இருந்துவிட்டது.

தனது தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்ததுடன் காமராஜர் சர்க்கார் விடவில்லே. தாங்கள் வீரர் கள் என்றும் பேசுகிருர்கள்.

சென்னேக்கு அநீதி இழைத்து விட்டனர் நேரு சர்க்கார் என்று சட்டசபையிலே எடுத்துக்காட்டிய போது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கூறிய பதில் நம்மை யெல்லாம் நகைப்பில் ஆழ்த்துகிறது.

"தென் இந்தியா அலட்சியப்படுத் தப்பட்டு விட்டது என்று யாரும் நினைக்க வேண்டாம். சண்டை போட நமக்கும் கூட பலம் இருக் கிறது(We Have Also Strength To Fight) நம்மை சாதாரணமாக அலட் சியம் செய்து விட முடியாது. நமது பங்கிற்காகப் போராடுவோம். திட் டக்குழுவோ அல்லது மத்திய சர்க் காரோ, நேர்மையுடனும் நீதியுட னும் நடந்தால் நம்மை ஒதுக்கி விட முடியாது. நம்மீது மற்றவர் கள் ஆதிக்கம் செலுத்துகிருர்கள் என்ற தாழ்ந்த எண்ணம் நம் மிடையே வேண்டாம். என்னுடைய சொந்த எண்ணம் என்னவென் ருல், நம்முடைய பங்கினேப் பெறு வதற்கு நம்மிடையே போதுமான பலமும், திறமையும் இருக்கிறது என்பதே!"

கனம் நிதி அமைச்சர் பேச்சில் காணப்படும் சொற்களே மீண்டும் ஒரு முறை படியுங்கள். சண்டை போட பலம் இருக்கிறது. நீதியுடன் நடந்தால் மத்திய சர்க்கார் நம்மை அலட்சியம் செய்ய இயலாது. நமக் குப் போதுமான பலமும் திறமை யும் இருக்கிறது. இந்தச் சொற் களின் மூலம் டில்லி சர்க்காரை பய முறுத்தலாம் என்று அமைச்சர் எண்ணினுர் போலும். சட்டசபை யில் இவ்வளவு 'பலமாக' அமைச் சர் பேசியதை புது டில்லியில் பேசி யிருந்தால் பயன் ஏற்பட்டிருக்கும்.

தங்களது திட்டத்தை கிழித்து எறிய முற்பட்ட டில்லியின் முன், காமராஜர் சர்க்கார் இப்படிப் பேசி யிருக்கவேண்டும். அந்த இடம் தான் பேசவேண்டிய பீடம். அங்கே கைகட்டி நின்று இங்கு வந்து சட்ட சபையில் 'நாம் யார் தெரியுமா!, என்று ஆரம்பித்துப் பேசுவது, நாம் ஆரம்பத்தில் கூறிய சிறு வனின் பேச்சுக்களேயே நமக்கு நினைவூட்டுகிறது.

சட்டசபையில் பலத்த குரலில் டில்லியை அதட்டுவது போல் பேசி ஞல் தமிழ் மக்கள் பாராட்டுவார் கள் என்று காமராஜர் சர்க்கார் எதிர்பார்ப்பது வீண் முயற்சி. டில் லியை அதட்டிப் பேசுவது அல்லது இப்பேச்சு டில்லியில் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துச் சொல்லும் 'அபயக்குரல்' தான் நிதி அமைச்சர் பேச்சு என்பதை பொது மக்கள் நன்குணர்ந்து கொள் வார்கள்.

S. C. N. நாடகக்கலா மன்றத்தின் அற்புதத்தயாரிப்பு

விதியின் சுழல்

தமிழ் சமூக நாடகம்

நடிகர்கள் S. C. நடராஜன்
S. S. நடராஜன்
P. S. ராமன்
K. T. M. பிள்ளே

நடிகைகள் T. V. D. ஆண்டாள்
N. R. சகுந்தலா
மற்றும்பலர்

பாடல்: N. நம்பிராஜன்

பயிற்சி & வசனம்: S. C. நடராஜன்

மனேவியைக் கேலிசெய்தால்?

கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு பிரசங்கி சொன்னுர்: "தன் மனேவியை மூன்ரும் மனிதன் ஒருவன் கேலி செய்வதைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய வர் யாராவது இந்தச் சபையில் இருந்தால் அவரை எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்."

ஒரு மெலிந்துபோன ஆசாமி எழுந்து நின்ருர்.

பிரசங்கி அவரைப் பார்த்து, "உங்கள் மனேவியை மூன்ரும் மனிதன் ஒருவன் கேலிசெய்தால் நீங்கள் பேசாமல் பார்த்துக் கொண்டிருப்பீர்களா? என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

மெலிந்த ஆசாமி சொன்னுர்: "மன்னிக்க வேண்டும். கேலி செய்வதைப்பற்றியா சொன்னீர்கள்? கொலே செய்வதைப்பற்றி என்று நான் நினேத்தேன்."

குலோ : அமராவதி ! தெரியுமா ஒரு சேதி ?

அம : என்னப்பா !

குலோ : மகாகவி கம்பர் நேற்று முதல் படுத்த படுக்கையாகக் கிடக்கிருராம்.

அம்பி : ஆ !

குலோ : ஆய்தேவி, செம்பியன் நாட்டார் எல்லோரும் அங்கு போயிருக்கிருர்கள்.

அம : அப்படியாளுல் நாமும்போய்ப் பார்த்துவிட்டு வருவோம். (அம்பிகாபதியிடம்) என், நீங்களும் வாருங்கள்.

குலோ : இதைப் போய் அவரிடம் சொல்கிருயே ! தந்தைக்கு உடல் நிலை சரியில்லை எனும்போது, மற்றவர்கள் வேண்டு கோள் விடுத்துத்தாஞ மகன் போய்ப் பார்க்கவேண்டும் !

அம்பி : உண்மையிலேயே உடல்நிலை......?

குலோ : பொய் சொல்லவேண்டிய அவசியம் இதில் குலோத்துங் கனுக்கு இல்லை !

அம : வாருங்கள் !

அம்பி : சரி ! வருகிறேன்.

[மூவரும் புறப்படுகிருர்கள்.]

—காட்சி முடிவு—

களம் 22

காட்சி : 22

இடம் : கம்பன் இல்லம்.

நேரம் : பகல்,

[கம்பன் படுக்கையில் கிடக்கிருன். அருகிலே மோனமாகவி, ஆய்தேவி, பெருங்குடி வணிகர் முத்தரசப்பர், செம்பியன் நாட்டார் முதலியோர் அமர்ந்துள்ளனர். படுக்கையிலிருக்கும் கம்பன், பேசக்கூடிய நிலையில் இருக்கிருன். உடல் தளர்ச்சி யுற்றிருப்பதற்கான அறிகுறிகள் மட்டும் காணப்பெறுகின்றன. பக்கத்தில் 'பணிக்கம்' வைக்கப்பெற்றிருக்கிறது. அடிக்கடி அதில் எச்சில் உமிழ்ந்த வண்ணம் இருக்கிருன்.]

ஆய் : கொஞ்சம் ஓய்வுகொள்வது நலம் ! தினமும் இரவில் கண் விழித்திருப்பது முதிர்ந்த வயதில் சரியல்ல.

கம் : எழுதும்போது முதிர்ச்சி தோன்றவில்லை ! விடியும் போதுதான் இடுப்பில் பெரும் வலி தோன்றுகிறது.

செம் : அது மகாக்விகளுக்கு இயற்கை !

கம் : பெரும் புகழ்ச்சி !

செம் : நேரிலே சொல்வதாலா ?

ஆய் : உண்மையை எவ்விடத்தில் சொன்ஞல் என்ன !

[கம்பன் சிரிக்கிருன். ஆய்தேவி, அங்கு இருந்த ஏட்டினை எடுத்துப் பிரித்தபடி இருக்கிருர். பெருங்குடி வணிகர் முத்தர சப்பர், கைத்தடியைத் தரையில் ஊன்றி அதன்மீது இரு கைகளையும் வைத்து அதில் முகத்தைச் சாய்த்தபடி இருக் கிருர். கம்பன் இடுப்பைத் தொட்டபடி, முனகுகிருன். உடன் முத்தரசப்பர் எழுந்து சென்று அவன் அருகில் அமர்ந்து, " மறுக்காதே !" என்று கூறி, இடுப்பைப் பிடித்துவிடுகிருர். ஏட்டில் பதிந்திருந்த ஆய்தேவி, திடீரென் முகம் மலர்ந்து, செம்பியன் நாட்டாரிடம் " இதைப் பார்த்தீர்களா ?" என்று ஏட்டினைக் காட்டுகிருர். செம்பியன் நாட்டார் கண்களைச் சுருக்கி, அதனைப் படிக்கிருர்.]

செம் : (படித்தல்)

இழைகுலா முலையினுளை யிடையுவா மதியினேக்கி
மழைகுலா வோதிநல்லார் களிமயக்குற்று நின்ருர்
உழைகுலா நயனத்தார்மாட் டொன்ஞென்றே
விரும்பற்கொத்தது
அழகெலா மொருங்கே கண்டால் யாவரே யாற்ற
வல்லார்.

அதாவது, சீதையின் அழகில் தோழிப் பெண்களும் காதல் கொண்டனர்-அதுதானே !

கம் : ஆமாம் !

செம் : அழகெல்லாம் ஒருங்கே கண்டார்கள் ! அப்படியென்ருல், சீதை வாழ்ந்த காலத்தில், மற்ற எந்தப் பெண்களுக்கும் அழகு இருந்திருக்காது !

[ஆய்தேவி சிரித்தல். முத்தரசப்பர் புன்னகை.]

கம் : நீங்கள்கூட இதனை வெறுக்கின்றீர்களா ?

செம் : (திடுக்கிட்டு) அடாடா ! நான் அதற்குச் சொல்லவில்லை. விளையாட்டாகக் கூறினேன். சொல்லப்போனல், ஒன் றைப் பெருமைப்படுத்துவதற்காக மிகைப்படுத்திக் கூறு தல், கவி இயற்கைதானே ! தவருக எடுத்துக்கொள்ளா தீர்கள் !

கம் : இல்லை. ஆனல், எனக்கே ஒரு பயம் இருக்கிறது, இதனை ஆதரிப்பவர்களோ எதிர்ப்பவர்களோ இலக்கியக் கழகத் தில் எத்தனைபேர் இருப்பார்கள் என்று !

ஆய் : அப்படியொன்றும் கருத்துக்கள் எழவில்லை. இது பற்றிய கருத்துக்கள் அரசவை நிகழ்ச்சிகளோடு முடி வடைந்துவிட்டன. ஆனல், அம்பிகாபதிக்கும் உங்களுக் கும் உள்ள மனக்கசப்பினைப் பற்றித்தான் பேசிக்கொள் கிருர்கள்.

முத்தர : அதுவும் தீர்ந்துவிட்டால் நன்ருயிருக்கும்,

[என்னும்போது, பதறியபடி, அம்பிகாபதி, குலோத்துங்கன், அமராவதி மூவரும் உள்ளே வருகிருர்கள்.]

அம் : அப்பா !

கம் : (எழுந்து-உட்கார்ந்தபடி) அம்பிகாபதி !

[இருவரும் கட்டித் தழுவுதல். சிறு அமைதி. கம்பன், அம்பிகாபதியின் தலையைக் கோதியவாறு சிரிக்கிருன்-ஆனல், அவன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகிறது. அம்பிகாபதி யின் கண்களிலும் அவ்வண்ணமே ! இதுகண்ட புலவர்கள் மகிழ்ச்சி எய்தல். குலோத்துங்கனும் அமராவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளுதல்.]

குலோ : ஏதோ, ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் அருள்தான் உங்களைச் சேர்த்துவிட்டது...

அம் : (மெதுவாக) இல்லை, சேர்த்துவைக்கும் அருளுக்கு உரிய வன் அனுமன் ! ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் மனைவி யையே, அவரிடம் அவன்தானே சேர்த்துவைத்தான் !

[அனைவரும் சிரித்தல்.]

(சிரித்து) குலோ : சரி ! அது போகட்டும். அதுபற்றி இப்போது பேச வேண்டாம் ! கம்பநாட ! இப்போது எப்படியிருக்கிறது உடல்நிலை !

கம் : (ஐயத்தோடு) ஸ்ரீராமனை நான் கடவுளெனக் கொண்டது உங்களுக்கு எப்படித் தெரியும் ?

குலோ : குருதேவர் சொன்னர்...

செம் : அம்பிகாபதி ! எது எப்படியோ இருக்கட்டும். இனி நீ கம்பருடன் இங்கேயே தங்கிவிடவேண்டும். கருத்து வேற்றுமைகள் ஆயிரம் இருக்கலாம். அது வேறு, பாசம் வேறு. இல்லையா !

கண்ணதாசன்

ஆய் : இதை ஏன் சொல்லவேண்டும்! தானுடா விட்டாலும் சதையாடும்.

[அம்பிகாபதியும் கம்பனும் சமாதானமாக ஒருவரை ஒருவர் பார்த்தல். "சரி! எங்கள் வேலை முடிந்துவிட்டது!" என்று சொல்லியவாறே குலோத்துங்கன் அமராவதியை அழைத்துக் கொண்டு சிரித்தபடி வெளியேறுகிறான். எல்லோரும் அவர்கள் போன திக்கையே பார்க்கிறார்கள்.]

—காட்சி முடிவு—

களம் 23

காட்சி : 23

இடம் : ஒட்டக்கூத்தன் இல்லம்

நேரம் : மாலை

[கூத்தன் பஞ்சணையில் சாய்ந்தபடி, கைகளைத் தலைக்குமேல் கட்டிக்கொண்டு கண்களை மூடிய வண்ணம் இருக்கிறான். அவன் மார்பிலே ஒரு ஏட்டுக் கத்தை இருக்கிறது. வாணியன் தாதன் உள்ளே நுழைகிறான்.]

வாணி : கூத்தரே! கூத்தரே!!

கூத்தன் : (கண் விழித்து) என்னடா புலவா! அற்புதமான கற்பனையிலிருந்தேன். மதயானை போல் புகுந்து கெடுத்து விட்டாயே!

வாணி : அப்படி என்ன கற்பனையது?

கூத் : புதியதோர் காவியத்திற்குத் திட்டம்!

வாணி : புறமா? அகமா?

கூத் : அகத்திலே துவக்கம், புறத்திலே நிறுத்தம்!

வாணி : கொஞ்சம் சாடை காட்டலாமா?

கூத் : கேள்! அன்னக்கொடி போன்ற ஒரு மங்கை! அசைந்தால் உயிர் வாங்கும் செங்கை! அவள் அழகுத் தேவியின் தங்கை, அச்சடித்தது போன்ற...

வாணி : (இடைமறித்து) நிறுத்தும், கூத்தரே! நிறுத்தும்! இது போன்ற விளக்கங்களிலே கம்பருக்கு ஆசை அதிகம் என்று இலக்கியக் கழகத்தில் கேட்டிருக்கிறேன். எப்போது நீரும் அவரிடம் உறவு கொண்டீர்?

கூத் : பித்தனடா புலவா! நீ பித்தன்! ஆற்றைப்பற்றிப் பாடும் போது நீரைக் குறிப்பிடாமல் முடியாது! அடுப்பைப் பற்றிக் கூறும்போது நெருப்பைச் சொல்லாமல் முடியாது! கடலைக் கண்டு பாடும் போது அலையைக் காணுமல் ஆகாது! கனியைப் பற்றி எழுதும் போது சுவையைச் சொல்லாமல் நடக்காது! மலரைப் பற்றிப் பேசும் போது மணத்தை வரையாமல் முடியாது! மங்கையைப் பற்றிப் பாடும்போது...யை விட்டுவிட முடியாது! இது கம்பருக்கு மட்டுமல்ல, உனக்கும் எனக்கும் கூடப் பொருந்தும்! அன்று முதல் இன்று வரை எவன் பாடாமல் விட்டான் அதை?

வாணி : இல்லை! உண்மைதான்! ஆனால், மலையைப் பற்றிப் பாடும் போது கூட...யைச் சொல்லித்தான் தீர வேண்டுமா?

கூத் : (சிரித்து) வேண்டியதில்லை! நன்று, புலவா! நீ அறிஞன் தான்!

வாணி : இலக்கியக் கழகத்தில் இரண்டொரு புலவர்களுக்கு இது தான் வேலை! நேற்றுப் பாருங்கள், தேன்மொழி திருத்தக்கருக்கு எவ்வளவு வயசாகிறது!

கூத் : சுமார் அறுபதிருக்கும்!

வாணி : சேரமான் பெருவீதியில் சிரித்துக்கொண்டே போன ஒரு இளமங்கையை விழித்துப் பார்த்தபடியே நின்றார்!

கூத் : (எழுந்து உட்கார்ந்து) அடுத்து என்ன?

வாணி : அவசரத்தைப்பார்... அருகில் நான் போனேன்.

கூத் : மங்கையின் அருகிலா?

வாணி : ஐயகோ! இல்லை! திருத்தக்கரின் அருகில்.

கூத் : பயனற்ற வேலை! இனிச் செய்தியில் சாரமிருக்காது, ஆனாலும் சொல்லித் தொலை!

வாணி : "சிற்றப்பா, என்ன இப்படி நிற்கிறீர்கள்" என்று கேட்டேன். உடனே கொற்றவன் பிள்ளை போலத் தலை நிமிர்ந்தார். கற்றவராயிற்றே, அதையும் மறந்தார்! முதியவர் என்னும் நினைவும் இழந்தார்! "வாணியன் தாதா, பார்த்தாயா அந்தப் பாவையை" என்றார். "பார்த்தேன், சிற்றப்பா! உங்கள் பருவம் போய் விட்டது, உருவமும் மாறி விட்டது! ஏனிந்த மயக்கம் உங்களுக்கு?" என்றுகேட்டேன். "போடா, பித்தா, நான்கு பிள்ளை பெற்றவள் அவள். ஐந்தாவது பிள்ளை இன்னும் ஆறு திங்களில் பிறக்கலாம்! கோச்சடையன் குமாரி! உடற்கட்டைப் பார்த்தாயா?" என்றார். நான் சிரித்தேன். "அதிலென்ன அதிசயம் கண்டீர்கள்?" என்றேன்.

கூத் : உடனே மேனியைப் பேணி வளர்க்கும் முறை பற்றி விளக்கம் கொடுத்தாரா?

வாணி : ஆமாம்! அதோடு அற்புதமான கவிதை ஒன்றும் பாடினார்!

கூத் : சரிதான்! அதுவேறு? காலம் போன கிழவன் காரிகையைப் பற்றிப் பாடினால் கற்பனை நயமே இருக்காதே!

வாணி : ஏனில்லை? கேளதை!

குலையீன்ற வாழைக்கும் இளமை தோன்றும்—அது
குலமாதர் மேனிக்கு உவமை யாகும்
...!

கூத் : நிறுத்து, நிறுத்து, எடுப்பிலேயே பிடிப்பு இல்லையே!

வாணி : அடுத்தபடியாக, அங்கம் அங்கமாக வர்ணிக்கிறார்.

கூத் : ஆயிரம்தான் வர்ணிக்கட்டுமே! கட்டுக்குலையாத பெண்ணைப் பற்றிப் பாடும் போது துவக்கத்திலேயே ஆடவர் நெஞ்சைச் சுட்டெரிக்க வேண்டாமா? என்ன தான் சொல்! அது நம் கம்பரால்தான் முடியும்!

வாணி : இவரும் அவர் போலவே ஒளிவு மறைவு இன்றிப் பாடுகிறார்.

கூத் : இருக்கட்டுமே! கம்பரின் கற்பனை நயம் எப்படி வரும்? சில்லறையாக அவர் பாடி வைத்த பாடல்களைத் தொகுத்தாலே 'பெருந்தனம்' ஆகுமே! அது போகட்டும், அவசரமாக வந்து எழுப்பினாயே, என்ன செய்தி?

வாணி : கம்பரும் அம்பிகாபதியும் ஒற்றுமை ஆகிவிட்டார்களாம்!

கூத் : வாழ்க அவர்கள்!

வாணி : என்ன கூத்தரே, இது!

கூத் : கேளடா புலவா! எதிரிகள் வாழவேண்டும் அப்போது தானடா நமக்கு வேலை! நீ அவசரக்காரன், நடப்பதெல்லாம் இன்றே நடந்து விடவேண்டுமென்று கருதுகிறாய்! அது கூடாது! விபீடணனின் பொறுமை வேண்டும். இராவணனுக்கு எதிராக ஒரு இராமன் வரும் வரை தன் சூழ்ச்சித் திட்டத்தைத் துல்லியமாக மூடிவைத்திருந்தான்! அதுதானடா முறை! நம் போன்றோர்க்கு இலக்கணமே அவன்தானடா! அவசரப்படாதே! விபீடணன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு நிம்மதியாக இரு!

—காட்சி முடிவு—

(தொடரும்)

ஆசிரியத் தோழருக்கு..

அன்புடையீர்! வணக்கம்.

விண்ணில் வெண்ணிலா நடம்புரி கின்றுள். காணும் அனைவரும் களிக்கின்றனர், அதனைக் காணும் பேதை முகிலாள் அழுக்காறு கொள்ளுகின்றுள் தன்னை யாரும் போற்ருததோடு தூற்றவும் செய்கின்றனரே என்று. தன்னுலான பணியைச் செய்யத் துவங்குகின்றுள். மக்களிடையேயிருந்து சிறிதுநேரம் மறைத்து நிற்கின்றுள் தண்மதியை. அதுதான் அவளால் முடிந்தது! ஏற்கின்றுள் நாட்டின் தூற்றலை. இதனைப் பற்றி நிலவு கலங்குவதுமில்லை. முகில் மீது கோபங் கொள்ளுவதுமில்லை. இந்நிலையில் தென்றல் வீசவேண்டுமென்பதே என் அவா.

இந்நிலையிலே 20-8-55 இதழ், கேள்விப் பெட்டியில் குருசாமி யாரைப் பற்றி ஏற்றுவந்த செய்தியைப் படித்தேன். தங்களைச் சவாலுக்கழைத்த சாதாரணப் பேர் வழிக்கு பதில் கூறியதையும் கண்டேன். இதனைப் பற்றி, சில அன்றே எழுத நினைத்தேன், மதுரைத் தோழர்கள் முந்திக்கொண்டனர்.

நம் அருமை அண்ணு அடிக்கடி கூறுவார் சிங்கவேட்டைக்குப் போகிற ஒருவன் இடையிலே ஓடும் சிறு நரியின்மீது கண்ணேட்டம் செலுத்தக்கூடாது, அப்படி செலுத்தின் கொண்ட எண்ணம் ஈடேருது என்று. அதுபோல தாங்கள் அவர்களைப் பற்றி எழுதுவதெல்லாம் நாம் ஏற்றுள்ள முடிவினுக்கு களங்கமாக அமையுமோ என அஞ்சுகின்றேன். தங்களின் எழுத்தால் அவர்களை யாரென்றறிய நாடு விழைகின்றது. ஆகவே, அவர்களும் மக்களாகின்றனர், அதனேடு மற்றுமொரு மனத்திற்குக் கவலைதரும் செய்தி 27-8-55 இதழில் "அடுத்த இதழில் கம்யூனிஸ்ட்டுகளின் வரலாற்று அறிவு எதிர்பாருங்கள்" என்பது. அவர்களைப் பற்றி ஒன்றுமே எழுதவேண்டாம் அன்பரே. கடமை கண்ணியம் கட்டுப்பாடு இம்மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு தண் தமிழ்நாட்டில் இன்மணம் பரப்பி வரும் தென்றலில் எதுமற்ற எதுவும் இடம் பெறக் கூடாது. நம் அறிவுப் பேழையாம் அண்ணுவோடு நாடு காணச் செல்லுகின்ற பாதையிலே, நம்முடன் பிறந்தார்க்கு ஏற்படுகின்ற தளர்வையும் அயர்வையும் போக்க தாலமுத்து, நடராஜன் மஜீத், பாண்டியன், வேலாயுதம் போன்ருரின் தியாக உள்ளங்களை எடுத்துக்கூறி வீரநடை நடந்து வெற்றிகாண விழைவோரின் வெற்றிமுரசம் தென்றல்.

நிராயுதபாணிகளான 9 பேர் சேலம் சிறையிலே சுட்டு வீழ்த்தப் பட்டனர். இன்னும் இதே அரசாங்கத்தால் பலர் மாண்ட கதை, பட்ட கஷ்ட நஷ்டம் அத்தனையும் நாடறியும். அப்படி இருந்தும் நேருவின் ரஷியப்பயணம் ஒன்றே அவர்களின் கண்ணையும் கருத்தையும் மயக்கிவிட்டது. சிங்கவேட்டைக்குச் செல்வதாகச் சொல்லி பயணம் துவக்கிய அவர்கள் இடையே நேருவால் விடப்பட்ட சிறுநரியைத் துரத்திச் செல்லத் தலைப்பட்டுவிட்டனர். அவர்கள் வழி மாறிவிட்டது. அத்தகையோர் வரலாறுதங்கள் ஏட்டில் இடம்பெருதிருப்பதுநல்லது.

தங்கள் சோலையில் அகமும் புறமும் சிலம்பும் மேகலையும் பத்தும் எட்டும் இன்னும் இதனையொத்த பலஇனிய மலர்களின்மணத்தையே விரும்புகின்றேன். நெய்தல் மலருக்கு இடம் வேண்டாம். அப்பாதுரையாரின் 'சிலம்பு வழங்கும் செல்வம்' தங்களின் 'கல்லக்குடி மாகாவியம்' ஆகியவற்றை தொடர்ந்து எதிர்பார்க்கிறேன், ராஜ தண்டனையை இன்னும் சற்று அதிகமாக எழுதவேண்டுகின்றேன். தென்றலை ஓர் இலக்கியப் பூக்காடாக காண விழைகின்றேன்.

அன்பன்,
தி. பாலசுப்பிரமணியன்

புத்தக மதிப்புரை

புத்தக வெளியீட்டாளர் ஒருவர், அப்டன் சிங்க்ளேர் என்ற பிரபல எழுத்தாளரிடம் தாம் வெளியிட்ட புத்தகம் ஒன்றைக் குறிப்பிட்டு, "அதை நீங்கள் படித்தீர்களா? அந்தப் புத்தகத்தைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

எழுத்தாளர் சொன்னுர்: "அந்தப் புத்தகத்தைப் பாராட்டுவதற்கு ஒரு காரணம் மட்டும் இருக்கிறது. அதாவது என் நண்பர் ஒருவர் யுத்தகளத்தில் போராடிக் கொண்டிருந்தபோது, அந்தப் புத்தகத்தை தம் மார்புக்கு நேராக இருந்த சட்டைப் பையில் வைத்துக் கொண்டிருந்தார். அவருடைய மார்பை நோக்கிப் பாய்ந்த எதிரியின் குண்டு புத்தகத்தில் பாய்ந்துவிட்டது; அதனுல் அவர் உயிர் தப்பிவிட்டார். குண்டினுல்கூட நான்காம் அத்தியாயத்துக்கு அப்பால் பிரவேசிக்க முடியவில்லை."

தாகம் தணிந்தது !...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கலங்கியிருக்கிறுள். ஆனுல் இன்று போல் என்றுமே?

ஏன்?

கண்ணீர் வற்றிப்போன கண்கள், இரத்தம் சுண்டிப்போன இதயம் சோகம் நிறைந்த மனம் இன்று ஏனே வெறிகொண்டு அலைந்தது. அவள் காதருகில் 'உன் மகன் சாகவில்லை, கொலை செய்யப்பட்டான்.' இந்தச் சொற்கள் என்னவோ ஓயாது எதிரொலித்தது. இதனுல் ஏற்பட்ட வெறி அவள் இரத்தத்தில் ஒரு புது உணர்ச்சியை, பழிவாங்க வேண்டுமென்ற உணர்ச்சியை தூண்டிவிட்டிருந்தது. இத்தனைக்கும் காரணம் நாளைக்குத் திருமணம்-யாருக்கு? பாண்டியனை கொன்றவர்கட்கு அல்ல. அரசுக்கும் வேம்புக்கும் திருமணம் - அதை ஒட்டித்தான் தெருக்கூத்து.

'மரத்திற்கு மணம் செய்யும் மடையர்கள் என் என் மகன் திருமணம் கண்டு துடித்தனர்,-பழி வாங்க வேண்டுமென்ற உணர்ச்சி இந்த பீடத்தில்தான் எழுந்தது. ஆனுல் யாரைப் பழிவாங்குவது?

ஏன்? அந்த மரங்களைத்தான்."

"மரத்தையா? ஆமாம் அந்த மணம் நடைபெறப்போகும் மரங்களைப் பழிவாங்குவதில்தான் தன் வெறிதணியும் என்று எண்ணினுள். அது தவறு என்றும் கூறமுடியாது. அவள் இதயத்தில் இருந்த பாசம்-மகன் திருமணம் நடைபெற அனுமதிக்காத இடத்தில் மரத்திற்கு திருமணமா? அதைக் கண்டு மகிழப்போகும் கிராமமே நீ சுடுகாடாகத்தான் மாறினுல் என்ன" அவள் உள்ளத்தில் வெந்து வெடித்த சொற்கள்.

மீண்டும் பேரிரைச்சல்!

குடிசைக்குச் சென்றுள். சிறிது விஞடிகட்குப் பிறகுதிரும்பி, பாதையில் நடந்தாள்.

எங்கே போகிறுள்? பழி தீர்த்துக் கொள்ளவா? அந்த மரங்களை பழி தீர்க்கவா? கையில்என்ன கோடரியா? வாழ்க்கை சுவடியை மூடிவிட்டு தன் பாதச்சுவடிகளை பார்த்து பெருமூச்செறிய வேண்டிய இவளா போகிறுள்? எண்ணங்கள் அலைமோதத்தான் செய்யும்! அவள் போய்க்கொண்டிருந்தாள். இருளில் அவள் உருவம் மறைந்தது.

★

வைகறை - கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. 'தெருக்கூத்து முடியும் கட்டம்-ராமனுக்கு முடிசூட்டும் காண்டம்-இடையே தூங்கிப்போனவர்கள் எல்லாம் எழுந்து சீதையை 'பாஞ்சாலியாக' நினைத்த நேரம். ஊர்ப் பெரியவர்களும் ஊராண்மைத்தலைவரும் குழுமியிருந்தனர்.

முடி உயர்ந்த ராமன் தலையில் இடம் பெறும் சமயம்-ஏதோ பரபரப்பு - ஊராண்மைத் தலைவரிடம் 'ஒருவன்' ஏதோ காதோடு காதாக சொல்லிக்கொண்டிருந்தான்.

பரபரப்பு குழப்பமாக உருக் கொண்டது. இதனுல் ராமனுக்கு சூட்டவேண்டிய முடி தவருக அனுமானுக்கு சூட்டப்பட்டது. சீதை பாதனேடு சிரித்துப் பேசியபடி இருந்தாள்.

"என்னங்க" ஒருவர் கேட்க. "அந்தக் 'கிழவி' சுருக்கிட்டுக்கிட்டாளாம்". அவர் கூற "தொலையட்டுமே" சொல்லி முடிக்குமுன், "அட நீங்க ஒண்ணு அவ அந்த வேப்பமரத்திலே."

"எதிலே கல்யாணம் செய்யனுமே அதிலா"

உரையாடல் முடியுமுன் ஊரே திரண்டது வேப்பமரத்திற்கடியில்.

இன்னும் சிறிதுநேரத்தில் மணம் நடைபெறவேண்டிய மணமக்கள் கழுத்திலே கயிறுகட்டி சுருக்கிட்டது போல, வேப்பமரத்தில் அவள் - பாண்டியனின் தாய் பிணமாக ஊஞ்சலாடிக்கொண்டிருந்தாள்.

ஊரார் உள்ளத்திலே வியப்பு! ஏதோ நடக்காத ஒன்று நடந்துவிட்டால் தோன்றுமே அந்த உணர்ச்சி! அத்தனைபேரும் பிணத்தைப் பார்த்தனர். அவள் உதட்டுப் புன்னகை சாகவில்லை. அவளுக்கு சரி என்று பட்டதை செய்து முடித்துவிட்டாள் - வெற்றியும் பெற்றுவிட்டாள், புன்னகை பிறக்காதா?

அந்தப் புன்னகைக்கு மட்டும் பொருள் புரிந்திட்டால்?

"பிணத்தை 'எறக்கி' தொலைங்கடா"-நாட்டாண்மைக்காரர் நல்லமுத்து உரக்கக் கத்தினுர். "பிணத்தை என்ன, மரத்தையே வெட்டித் தொலையடா" பின்னுல் இருந்து ஒரு பெரியவர் கூறினுர்.

அனைவரும் அவரைப் பார்த்தனர், "சுருக்கிட்டுகிட்ட மரம் தம்பீ, இனிமே சுகப்படாது. ஊருக்கே கெடுதி, வெட்டித் தொலைங்க."

அமைதி நிலவியது. மணமக்கள்- அந்த மரங்கள்-மாளப்போகின்றன, மரகதத்தைப்போல பாண்டியனைப் போல! சற்றுநேரம் கழித்து 'சட சட' என்று மரம் ஒடிந்துவிழும் சத்தம் ஊரையே அதிரச் செய்தது.

திருமணம்

கடலூர் தோழர் இசையமுது அவர்களுக்கும் தோழியர் கமலவேணி அவர்களுக்கும் 5—9—55 காலை 9 மணிக்கு கடலூர் உப்பலவாடி தெருவில் வாழ்க்கை யொப்பந்த வைபவம் நடைபெறும்.

விற்பனையாகிறது

புகழ் படைத்த தமிழ் நூல்கள்!

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை, எம்,ஏ, எல்,டி.,
எழுதிய

சரித்திரம் பேசுகிறது ரூ 3--0--0
மருதூர் மாணிக்கம் ரூ 3--0--0

கண்ணதாசன் எழுதிய

ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி ரூ 4--8--0
ஈழத்துராணி ரூ 1--0--0
கூட்டுக்குரல் ரூ 1--0--0
பெரும்பயணம் ரூ 1--0--0
இலக்கியத்தில் காதல் ரூ 1--0- 0
புதுமைப் பெண் 'ஜீவா' ரூ 1-12-0
கண்மணி 'தென்னரசு' ரூ 1--0--0

வியாபாரிகள் கழிவு 25 சதவீதம்

அருணேதயம்

40, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14.

‘தந்திரி’ சொல்கிறார் தனி நபர் சொத்தாம் !

◉

“கடவுளின் சொந்தச் சொத்துக்களை ஒழிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?”

“எந்தத்தனி நபர் சொத்திலும் தலையிட நாங்கள் விரும்பவில்லை. கடவுளாக யிருந்தாலும் சரி, தனி மனிதனாக இருந்தாலும் சரி”

இப்படி ஒரு வாதம் ஆகஸ்டு 26ம் தேதி சென்னைசட்ட சபையில் மந்திரி பரமேஸ்வரனுக்கும் உறுப்பினர்களுக்கும் நடை பெற்றிருக்கிறது. உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிற நல்ல கேள்விகளுக்கு அமைச்சர் தகுந்த பதிலிறுத்ததாகத் தெரியவில்லை. ஆரம்பத்தில் கோவில் சொத்துக்களை தனி நபர் சொத்து என்று அமைச்சர் கூறியிருக்கிறார். அதில் தலையிட சர்க்கார் விரும்பவில்லையென்றும் சொல்கிறார். அவருடைய கருத்துப்படி குறிப்பிட்ட ஒரு சிலர் கோவில் சொத்துக்களை தங்களுடைய சுகவாழ்வுக்கு பலியிட்டுக் கொள்வதை அனுமதிக்கவும் நாங்கள் உடந்தை என்பதை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார். கோவில் சொத்து, எந்த வகையில் தனி நபர் சொத்தாகும் என்பதற்கு அமைச்சர் காரணம் காட்டவில்லை. பலதரப்பட்ட மக்களின் உழைப்பும் அதனால் ஏற்பட்ட ஊதியமும் நம்பிக்கையின் பெயராலும் மனச் சாந்தியின் பெயராலும் தான், கோவில் சொத்துக்களாக உருவெடுத்திருக்கின்றன என்பது அமைச்சருக்குத் தெரியாதது அல்ல! தெரிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு. பொதுச் சொத்துக்களின் பேரில் சர்க்கார் சொந்தம் பாராட்டலாம் என்பதும், பொதுவான சாதனங்கள் தேசீய மயமாக வேண்டும் என்பதும் தான் வளர்ந்து வரும் ஜன சமுதாயத்தின் புதிய தோர் ஒப்பந்தம். மக்களின் மனநிலை இவ்வாறிருக்கையில் ஆண்டவனுடைய சொத்தையே — மகேஸ்வரனுடைய படைப்புத்தான் இந்த மாநிலம் என்று கருதப்படுகிற கடவுளரின் சொத்தையே-அமைச்சர் தனி நபர் சொத்து என்கிறார். ஆண்டவனுக்கும் மக்களுக்கும் தொடர்பு இல்லை என்ற முடிவுக்கு வந்தவர்கள், ஆண்டவன் வேறு மக்கள் வேறு என்ற தத்துவத்தைத் துணிந்து நிலைநாட்டக் கூடியவர்கள், அவ்வாறு சொன்னால் நாம் கவலையடையப் போவதில்லை. ஆண்டவன்தான் சர்வரட்சகன் என்று சொல்கிற, அவனன்றி ஓரணுவும் அசையாது என்று நம்புகிற, மதம் இன்றேல் ஒழுக்கமில்லை என்று பிரச்சாரம் செய்கிற, மக்களின் வரிப்பணத்தின் ஒரு பகுதியை சந்நிதானங்களுக்கு விரயம் செய்கிற காங்கிரஸ் சர்க்காரின் அறநிலைய மந்திரியே கோவில் சொத்துக்கள் தனி நபர் சொத்து என்று சொன்னால் நமக்கு வேதனையாகத்தானிருக்கிறது! கோவில் சொத்துக்களை அள்ளிச் சூறையிடவேண்டுமென்று கூட நம்பர் கேட்கவில்லை. சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடாதா என்றுதான் கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி ஜனநாயகத்தின் அறிகுறிதானே தவிர அமைச்சர் கருதுகின்ற படி நாத்தீகம் என்று எண்ணுவதற்கில்லை. உலகம் கடவுளின் படைப்பு என்றால் அந்த உலகத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அதேஉலகத்தைப் படைத்த ஆண்டவனுடைய சொத்தை பயன் படுத்துவதற்கு சர்க்கார் ஏன் அஞ்சவேண்டும்? இந்தப் பொருளை உள்ளடக்கித்தான் அங்கத்தினர் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடும். இதற்கு அமைச்சர் ஆண்டவனுடைய சொத்துக்கு பரிந்து பேச வேண்டியதுமில்லை. ஆண்டவனைத் தன்னுடைய சொந்தப் பொருளாகக் கருதி வாழ்வு நடத்து வோருக்கு ஊக்குவிக்க வேண்டிய அவசியமுமில்லை. கோவில் சொத்துபற்றிய அந்த உறுப்பினரின் கேள்வி நாட்டிலே செயல் முறைக்கு வரும் காலத்தை, மந்திரி பரமேஸ்வரன் பார்க்காமல் இருந்துவிடப்போவதில்லை. ஆனால், எந்த ஆண்டவனின் சொத்துக்களை எந்த சர்க்கார் தனி நபர் சொத்து என்று சொல்லுகிறதோ, அதே ஆண்டவன் வர்க்கத்தைச் சேர்ந்தவருக்கு அதே சர்க்காரின் தலைமை நிலையம்-டில்லி சர்க்கார் ரூ-8000 ஒதுக்கியிருக்கிறது. கன்னடப்பகுதியில் அசன்மா வட்டத்தில் சரவணபல்கோயிலில் உள்ள கோமுதீஸ்வரரின் சிலையில் வெடிப்புப்பாய்ந்துள்ளதாம்! அதைப் பாதுகாக்க மத்தியசர்க்கார் ரூ8000ஒதுக்கியிருக்கிறதாம்.

பயன்படாத ஆண்டவன் சொத்தை ஏன் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டால் அது தனி நபர் சொத்து என்கிறார்கள். அதுபோல், ‘தனி நபர்க் கடவுளின்’ சிலையைப் பாதுகாக்க மட்டும் மக்களின் வரிப் பணமா ? அகிலத்திற்குதவாத சொத்துக்களை வைத்துள்ள ஆண்டவன் தேவைதானா? அகிலத்தாரின் உதிரத்தைப் பணவடிவில் உறிஞ்சும் ‘சிலைப் பாதுகாப்புகள்’ அவசியமா?

கேள்விப் பெட்டி

எஸ். நாராயணன்,
26, தேன்கூவம் ரோடு,
மதுரை.

மங்கையர்திலகத்தில் துளசியைக் குல தெய்வமாக்கியும், ‘தேவ’ என்றொரு பாட்டும் உங்கள் பெயரிலே வெளியிடப் பட்டிருக்கிறதே, அவை நீங்கள் எழுதியவை தானா?

ஆமாம்; அந்தப்பாடல்களைப் பாடுகிற கதாபாத்திரம், பிரார்த்தனைப் பலன் அளிக்காமல் சுய முயற்சியாலும், டாக்டரின் துணையாலும். குழந்தையைக் காப்பாற்றுவதாகக் கதையை முடித்திருந்தேன். முன்னால் வரும் இரண்டு பாட்டுகளுக்கும்மாற்றுப் போருள் அதில் இருந்தது. ஆனால் பிரார்த்தனை தான் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற வாதம் வந்ததனால் நான் வெளியேறினேன். அப்போது இரண்டு பாடல்களும் ‘ரேகார்டு’ ஆகிவிட்டன. இப்போது படத்தில் அந்தப் பாடல்களையும் வைத்துக் கோண்டு,டாக்டர் கைவிட்ட குழந்தையை தேவன் காப்பாற்றியதாகவும் மாற்றி யிருக்கிறார்கள். அந்தப் பரிதாபத்திற்கு என் பாடல்களும் துணை சேர்ந்திருக்கின்றன. (அதோடு அண்ணி, மறுஅவதாரம் எடுப்பதாகவும் கதையைக் கோண்டு போயிருக்கிறார்கள்.) இதுதான் நடந்தது. டைரக்டருக்கு எழுதிக்கேளுங்கள் சோல்வார். குறிப்பிட்ட பாடல்கள் எழுதப்பட்டதின் நோக்கம், முடிவில் நான் வசனம் எழுதாமல் விட்டதன் காரணம். இதுதான் என்பது அவருக்குத் தெரியும்.

அவர் முகவரி,
டைரக்டர் பிரசாத்,
அடையாறு, சென்னை

◉

வீ. ராமையா, பேரியபாளையம்

சென்ற இதழ் ‘வள்ளுவன் மூத்தோன்’ பகுதியில், வெளியாகி இருக்கும் ‘உண்ணவும், நிலை பெறுதுணர்வு நீங்கிய’ என்பது சரிதானா ? உணர்வு மொன்றிட என்பது தானே காணப்படுகிறது ? ‘நீங்கிய’ என்பது பாடபேதமா?

இல்லை; கம்பனின் வரிகளை வைத்து சில வார்த்தைகளையும் சேர்த்து,நான் வடித்துக்கோண்ட வரி அது. அதனால் தான் மேற்கோக்கிகள் (“......”) இல்லாமல் அந்த வரியையும் எழுதியுள்ளேன்.

14. பொய்யடா பொய்யடா பொய்!

2-வது தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெண்பாக்கள் எழுதியவர்கள் :—

(1) சௌந்திரராஜன், பண்ணைக்காடு, கொடைக்கானல் மலை (2) அ. செழியன், 10, சிங்காரத் தோப்புத்தெரு, திருச்சி. (3) டி. எஸ். டி. இராசன், திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம். (4) வை. கருப்பசாமி, திருநகரம், அருப்புக்கோட்டை. (5) இரா. கருப்பையா, பண்ணைய வணிகர், கண்டரார் கோட்டை. (6) இரா. சி. அகரப்பேட்டை, நேமம் அஞ்சல். (7) வேல். சின்னையா, ஆலடிப்பட்டி, வெள்ளாகுளம். (8) கே. ராதாகிருட்டிணன், கம்பளிகாரன் குப்பம்., நல்லாத்தூர். P. O. (9) செல்வதாசன், 10, கச்சாலீஸ்வரர் தோட்டத்தெரு 2-வது சந்து. சென்னை-1. (10) பா. வேலன், 21-7 வெட்டர்பர்ன் பேட்டை நீ 2, கோவை. (11) மாணிக்கம், மேட்டுப்பட்டி, லால்குடி. (12) க. ச. பால சுப்பிரமணியன், கன்னங்குறிச்சி, சேலம் மாவட்டம். (13) அ. பாலசுப்பிரமணியன், 6-7 அரசவீதி, கொண்டாலம் பட்டி, சேலம் மாவட்டம். (14) எம். பிள்ளைமுத்து பி. ஏ., 24, காந்திசாலை, சுவால்பேட்டை, அரக்கோணம். (15) பிச்சைமுத்து, பாகனேரி. (16) வ. சு. வெங்கடேசன், 22, மேட்டுத்தெரு, திருவையாறு. (17) டி. ஆர். சண்முகம், பண்ணைக்காடு, கோடைசாலை வழி. (18) ஏ. அரங்கசாமி, மங்கள விலாசம், தெற்கு 4-ம் வீதி, புதுக்கோட்டை. (19) இரா. வை. எழில் வழுதி, முழு. பெரி. இல்லம், இராங்கியம். (20) கே. கல்யாணி, 60, பெரிய செட்டித்தெரு, செங்கல்பட்டு. (21) விஸ்வம், 10-1 லாலிரோட் போஸ்ட், கோயம்புத்தூர். (22) தெருப்பாடகன், பம்பாய். (23) ந: தங்கம், 87 வடக்குத்தெரு, இராமநாதபுரம். (24) இராம. முடியரசன், பழையவளவு, பாகனேரி அஞ்சல். (25) சாமி, எழிற்செல்வன், 4-53 கீழைத்தெரு, பழையவளவு பாகனேரி. (26) முகில்தாசன், சின்னமனூர், மதுரை மாவட்டம். (27) கவியன்பன், அறைஎண் 7, கிளைவ் இல்லம் தெப்பக்குளம், திருச்சி. (28) பூண்டி கிழார், நெடுங்காழுள்ளி. (29) சு. மா. செல்வன், கலிதீர்த்தான் குப்பம், திருபுவனை. (30) இசையரசு, வானராங்குடி, கூத்தூர் அஞ்சல். (31) வே. சண்முகம், 2563, காவேரி அக்காள் சந்து, இராசகோபால் சாமி கோயில் தெரு, தஞ்சை. (32) சி. சிவராமலிங்கம், 33, பவழக்காரத் தெரு, மண்ணடி சென்னை-1 (33) வெற்றிவேந்தன், மே: பா. அருணகிரி, வெற்றிலைப்பாக்குக்கடை, இராசபாளையம். (34) பெரி. இளங்கீரன், மாரியம்மன் தெரு, பாகனேரி. (35) ஆ. பழம் நீ, முத்துப்பட்டணம், காரைக்குடி. (36) சா. பில்லப்பன், கீழைத்தெரு, பழையவளவு, பாகனேரி. (37) வை. சுப்பிரமணியன், ஆசிரியர், வடசேரி, நாகர்கோவில். (38) சுப்பு காசிநாதன், ராயவரம். (39) செ. காளியப்பன், தியாகராசபுரம், தனுக்கப்பட்டி அஞ்சல். (40) மு. தேவராசு, 21-6 லைட்ஹவுஸ்ரோடு, கோயமுத்தூர். (41) தமிழ்மணி, அரசர் கல்லூரி, சிவகங்கை. (42) சோ. பாலகிருட்டிணன், 28, விசாலாட்சி விடுதி, அழகப்பா கல்லூரி அஞ்சல், காரைக்குடி. (43) அமுதன், சிக்கராயபுரம், குன்றத்தூர். (44) பி. துரைராஜ், ஆசிரியர், 169, சாத்தாரவீதி; சீரங்கம், திருச்சி. (45) அன்பினொளி, கட்டிமேடு, தஞ்சை மாவட்டம். (46) இசைச் செல்வன், செந்தமிழ்ப் படிப்பகம், 1-41 வன்னியர் தெரு, வெங்கடாபுரம், அம்பத்தூர். (47) கி. இராசாராமன், தழுதாளி, மயிலம் அஞ்சல்.

அகிலமெலாம் புகழ்ந்தோதும் அழகுதமிழ் இலக்கியத்தின்

புகழ்பாடாப் புலவர்களின் வாயென்ன வாயே!

புவிக்கெல்லாம் கற்பனைகள் தந்தவளம் தாயே!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லையற்ற அளவே இதற்குத் தடையாகவும் உதவியுள்ளது. தமிழில் சைவ இலக்கியம், வைணவ இலக்கியம், சமண இலக்கியம் என்று பிரித்தால்கூட, ஒவ்வொரு சமய இலக்கியமும் . மற்ற மொழிகளின் முழு இலக்கியத்திற்கு அளவிலும் பெருமையிலும் ஈடு கொடுக்கக்கூடியது. ஆனால் பல சமயங்களின் பூசல்களிடையே ஒரு திருக்குறள் மிளிர்வதுபோல, இப்பல கட்சிகளிடையேயும் ஒற்றுமை விளைவிப்பதாயுள்ளது சங்க இலக்கியம்.

கம்பர் அடியார் கம்பரையும், சேக்கிழார் அடியார் சேக்கிழாரையும் எவ்வளவு பெருமையுடையவராகக் கருதுகின்றனரோ, அவ்வளவு, கம்பரும் சேக்கிழாரும் சங்க இலக்கியத்தைப் பெருமையுடையதாகக் கொண்டனர் என்பதும், அக்கம்பரும் சேக்கிழாரும் மட்டுமன்றி அச்சங்கப் புலவரும் திருவள்ளுவரை உச்சிமேற் கொண்டனர் என்பதும் கருதத்தக்கது. கவிதைச் சிறப்பிலும் பிற்காலக் கவிராயர்கள் கம்பரையும் சேக்கிழாரையும் பின்பற்றினும் எப்படி அவர் சிறப்பையடைய வில்லையோ, அதுபோலவே கம்பரும் சேக்கிழாரும் ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும் சங்கப் புலவரையும் திருவள்ளுவரையும் பின்பற்றினராயினும் அவர்கட்கு ஒப்பாகவில்லை யென்பது மிகையாகாது.

இந்நிலையில் சங்க இலக்கியம், கட்சிகளின் எல்லைகடந்த முழு ஒற்றுமையை நாட்டும் தமிழின் நாட்டுரிமை இலக்கியமாக நிலவுகிறது. தமிழின் இடைக்கால பிற்கால நூல்களைச் சிறப்பிப்பவர் அந்நூல்களைப் பிறமொழி நூல்களுடன் ஒப்பிட்டுச் சிறப்புக் கூறுகின்றனரே யன்றித் தனித்தமிழ்ச் சங்க இலக்கியத்துடனோ திருக்குறளுடனோ அல்ல என்பதைத் தமிழர் கவனித்தல் வேண்டும். தமிழின் இடைக்கால பிற்காலங்கட்குரிய முதனூல்கள்கூட உலகின் பிற முதன்மை வாய்ந்த இலக்கிய முதனூல்களுக்கு ஈடு செலுத்தக் கூடியவை என்பதில் ஐயமில்லை.

இடைக்கால பிற்கால நூல்களைப் போற்றுபவர் போற்றுக. ஆனால் முன்னூல்களே தமிழர் புகழின் கொடுமுடி யென்பதை மறவாதிருப்பார்களாக.

சங்க இலக்கிய வாழ்வுக் காலம் முடிவற்ற பின்பே, பிற்காலத் தமிழிலக்கிய வாழ்வு தொடங்கிற்று என்பதை யாவரும் அறிவர். இவ்விரண்டு காலங்களுக்குமிடையே ஓர் இருண்ட இடைக்காலம் கி. பி. 3-ம் 4-ம் நூற்றுண்டுகளில் நிலவியிருந்ததென்று வரலாற்றுராய்ச்சியாளர் எடுத்துக் காட்டுகின்றனர். தென்னாட்டிலுள்ள இவ்விருண்ட இடைக்காலத்தைப் போலவே, வடநாட்டிலும் கிட்டத்தட்ட இதே 3-ம் நூற்றுண்டில் ஓர் இருண்ட இடைக்காலம் இருந்தது என்பதை வரலாற்று மாணவர் கவனித்தல் வேண்டும். இவ்விருண்ட இடைக்காலமே வடநாட்டில் புராணகாலமாகும். காலப்போக்கில் வளர்ந்து வந்த இதிகாச புராண சுமிருதி முதலிய பல 'காலங்கடந்த' நூல்கள் இன்றைய நிலையில் உருவாக்கப்பட்ட காலம் இதுவே.

தென்னாட்டில் இருண்ட இடைக்காலத்தில் ஏற்பட்ட அழிவுக்குப் பின் பழைய சங்ககால வாழ்வின் பின்னணியான நாகரிகம் சிதைந்தொழிந்து ஒரு புதிய வாழ்வு தொடங்கிய தன்றோ? அதுபோலவே வடநாட்டிலும் இவ்விருண்டகாலத்தின் முன்னிருந்த நாகரிகமும் நிலையும் மாறின. பெரும்பாலும் புத்த சமணச் சார்பான பாலி, அர்த்தமாகதி முதலிய பண்டைத் தாய்மொழி வாழ்வுகள் அழிந்து புதிய வடமொழி இலக்கிய வாழ்வு இதன்பின் தொடங்கிற்று. இருண்ட காலத்துக்கு முன் வடவர் மொழி வடமொழியாகவில்லை. இலக்கியமும் தோன்றவில்லை.

சங்க காலத் தமிழிலக்கியமும் பிற்காலத் தமிழிலக்கியமும் ஒரே மொழியில் தான் எழுதப்பட்டுள்ளன. ஒன்று தாய், மற்றொன்று பிள்ளை என்ற உறவும் அவற்றிடையே உண்டு. தாயின் சாயல் பிள்ளையிடத்தில் ஆங்காங்கே காணப்படுவதும், தாயின் பாசம் பிள்ளையிடத்தில் ஓரளவு நிலவுவதும் இயல்பே. ஆனால் பிற்காலத் தமிழிலக்கியம் தாயின் அறிவுவளமும் செல்வவளமும் இழந்து, தாயின் தன்னுண்மை நிலையும் விடுதலையார்வமும் இல்லாத பிள்ளை போலவே காட்சியளிக்கிறது. எனவே, மொழியாலும் வரன்முறையாலும் இவ்விரண்டிலக்கியங்களும் ஒன்றானாலும், தன்மையில், தரத்தில் பண்பாட்டில் இவையிரண்டும் இரு வேறுபட்ட இலக்கியங்களேயாகும். தாய் செல்வச் சீமாட்டி; மகள் பஞ்சைப் பன்னாடை. தாய் குப்பையில் வீசியெறிந்த மணிகள் மகளின் ஒப்பற்ற பெருஞ்செல்வம். தாய் வணங்காமுடியரசி; மகளிடம் அப்பெருமை யில்லையென்பது மட்டுமன்று; இருக்குமளவு பெருமையும் சிறிதுசிறிதாகக் குறைந்து, வணங்க வேண்டுமா, வேண்டாமா என்ற சிந்தனைக்கு இடமே யில்லாமல், வணங்க வேண்டுவது யாரை என்ற சிந்தனை ஏற்பட்டு விட்டது. தாயின் உடல் நிமிர்ந்து நிலைபெற்றது: ஏனெனில் அதற்கு உறுதியான முதுகெலும்பு உண்டு; ஆனால் மகளுடலில் முதுகெலும்பு தவிர மற்றெல்லாம் உண்டு. தாய் இயற்கையழகும் பொலிவும் வாய்ந்தவள். மகளின் செயற்கை அழகு முறைகளும் போலி அணிகலன்களும் அவளது பொலிவின்மையைத் தான் எடுத்துக்காட்டுகின்றன.

தாயிலக்கியத்தின் தன்மையைப் பேணமுடியாத நிலையில் பின்னிலக்கியம் அதன் புகழை அவாவிப் பேணியதில் வியப்பில்லை. சங்கஇலக்கியங்களினும் முற்பட்டதாகிய திருக்குறளைச் சங்கஇலக்கியங்கள் தாமும், பெயர்குறிப்பிட்டும்குறிப்பிடாமலும் எடுத்தாண்டு சிறப்பிக்கத் தயங்கியதில்லை. அதுபோலவே தொல்காப்பியம், திருக்குறள் போன்ற தொல்பழமை வாய்ந்த நூல்களின் உரைகளும் சங்க நூல்களின் உரைகளும் இடைக்கால, பிற்கால இலக்கியங்களில் எடுத்தாண்டு போற்றப்படுகின்றன. இங்ஙனம் எடுத்தாளப்படும் இடங்களையெல்லாம் புலவரும் மாணவரும் தேர்ந்து ஒப்பிட்டுப் பார்த்தால், பிற்காலத்தவர் விரித்தும் புதுக்கியும் பலபடப் புனைந்தும் கூறினும், இலக்கியத் தலையூற்று தலையூற்றாகவே இருப்பதைக் காண்பர்.

இயற்கையுடனும் வாழ்வுடனும் ஒன்றுபட்டு நின்ற சங்ககாலப் புலவர்கள் அவற்றுடன் தொடர்புடைய படைப்புக் கலையிலேயே ஈடுபட்டனர். பிற்காலப் புலவரோ இயற்கையையும் வாழ்வையும் ஊன்றிக் கவனியாது சங்ககாலக் கவிதையின் கருத்துக்களையும் புறப்போர்வைகளையும் புதுக்கிப் பெருக்கி அவற்றினூடாகவே இயற்கையையும் வாழ்வையும் தீட்டினர். சங்ககால இலக்கியக் காட்சிகள் உயிரோவியங்களாகவும் அறிவு, உணர்ச்சி கலந்த ஓவியங்களாகவும் விளங்குகின்றன. பிற்காலத்தவை பெரிதும் சொல்லோவியங்கள் மட்டுமே. கனிமலர்ச் சோலைகளினிடமாக இலை நிறை காட்டையே பிற்காலத்திற் காண்கிறோம். நாளடைவில் அவ்விலைகள் தாமும் தாளிலைகளாகத் திரிபுற்றன.

சங்க இலக்கிய நூல்களை ஒருபுறமும் இடைக்கால, பிற்காலத் தமிழிலக்கியத்தையும் வடமொழி இலக்கியத்தையும் மற்றொரு புறமும் வைத்து ஆராய்ந்தால், வடமொழி இலக்கியம் பெரும்பாலும் இடைக்காலத் தமிழிலக்கியத்தை ஒத்தும், முற்காலச் சங்க இலக்கியத்திலிருந்து மாறுபட்டும் இருப்பது காணலாம். தமிழிலக்கியம் ஆங்காங்குச் சங்க இலக்கியத்தை நேரிடையாக மேற்கோள் காட்டுவது போல, வடமொழியிலக்கியம் காட்டுவதில்லை. ஆனால், தமிழிலக்கிய நூல்கள் சங்க நூல் உரைகளையும் கருத்துக்களையும் மேற்கொண்டு புதுக்குவது போலவே வடமொழி நூல்களும் புதுக்குவது காணலாம். புராணகாலக் கதம்ப நூல்களான இதிகாச புராண சுமிருதிகளிலும் வடமொழி இலக்கிய நூல்களிலும் சங்க இலக்கிய நூல்களின் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், முழுப்பாடல்கள், பாடற் பகுதிகள் ஆகியவை ஒத்துவிளங்குகின்றன என்பதைப் பல வடமொழி அறிஞரே எடுத்துக் காட்டியுள்ளனர். சங்ககால நாகரிகத்திற்கு குறைபட்ட பிற்காலத் தமிழிலக்கிய ஆசிரியரைப் போலவே, வடமொழி இலக்கியத்தாரும் சங்கத் தமிழில் திறம்படக் கூறியதை விரித்தும் புதுக்கியும் குழைத்தும், சில விடங்களில் வழுக்கியும், பலவிடங்களில் தெளிவு காணாது முரண்பட்டும் பகர்ந்துள்ளனர் என்பது காணலாம். இவற்றால் சங்க இலக்கியம் தமிழிலக்கியத்துக்கு மட்டும் தலையூற்றன்று. இடைக்காலத்து ஆன வடமொழி இலக்கியத்துக்கும் பிற பிற்காலத் தாய்மொழி இலக்கியங்களுக்கும்கூட அதுவே தலையூற்றாகும் என்பது தெரியவரும்.

தமிழிலக்கியம் சங்க இலக்கியத்தைப் பின்பற்றுவது இயல்பு. வடமொழி இலக்கியம் அங்ஙனம் பின்பற்றியது என்று கூறுதல் பொருந்துமா என்று பலர் மலைவுறலாம். ஆனால், மூன்று இலக்கியங்களையும் ஒப்பிட்டால் தமிழிலக்கியத்தைவிட வடமொழி இலக்கியத்தின் சங்க இலக்கியச் சார்பு நன்கு தெளியக் கூடியதாகவே இருக்கிறதென்றும் காணலாம். தமிழில் சங்க இலக்கியத்துக்கு முற்பட்டே முத்தமிழிலக்கண இலக்கிய மரபு உண்டு. வடமொழியில் புராணகாலத்துக்கு முற்பட்ட இலக்கிய மரபு இல்லை. வால்மீகியே வடமொழியின் ஆதிகவி என்று கூறப்படுவது இதனாலேயேயாகும். மேலும் தமிழிலக்கியத்தார், சங்க இலக்கியத்தைப் பின்பற்றிய இடங்களிலுள்ள முரண்பாடுகளைவிட வடமொழியாளர்கள் பின்பற்றியஇடங்களிலுள்ள முரண்பாடுகள் மிகுதி. புராணகால நூல்கள், பலர் பல காலத்தில் பலபட எழுதிய கதம்ப நூல்களாதலால் தமிழில் பலநூல்களின் கருத்துக்களையும் தம் கருத்துக்களையும் ஒருங்கே ஒரே நூலில் கூறி முரண்பாடுகளை வளர்த்தனர்.

காலத் தொடர்பும் இம் முரண்பாடும் கண்டும் தெய்வ மொழியாகிய வடமொழி, தமிழைப் பின்பற்றுமோ என்று ஐயுறுபவர்க்குப் பைசாச மொழியிலிருந்து பெருங்கதையையும், புத்த சாதகக் கதைகளிலிருந்து பஞ்ச தந்திரத்தையும் அவர்கள் உருவாக்கியதை எடுத்துக் காட்டலாம். யவன (கிரேக்க)ரிடமிருந்து வானநூல்களை மேற்கொண்டதும் கவனிக்கத்தக்கது. மற்றும் தமிழகம் பற்றிய அவர்கள், ஆர்வத்தை நேரிடையாகவும் காட்டலாம், தொடக்ககாலக் கவிஞனாகிய காளிதாசன் காலத்திலிருந்தே வடமொழியாளர் கவிதையில் தென்றல் மலயவாதம் என்றும் சந்தனம் மலயஜம் என்றும் வழங்கலாயின. தொடக்க காலத்திலிருந்தே வடமொழி இலக்கியத் தலைமை நிலையால் காஞ்சி இந்தியத்துணைக்கண்டத்தின் தலைசிறந்த சமய கலைத் தலைநகரமாக விளங்கியதும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

தென்றல்
திராவிட நாடு
பிரிவினை நாள்
மலர்
17-9-55ல்
வெளிவருகிறது.
விலை அணா நான்கு.

மாயத்துறவு !

'திருக்குறள் தலைசிறந்த உலக நூல் என்ற பேரையும் புகழை யும்பெற்று விட்டது. குறளைக் குவல யத்திற்கு விளம்பரப்படுத்த வேண் டியதில்லை. தமிழார்வம் என்பது அடுக்கு மொழியாலும், அடுக்காத நாத்தீகக் கொள்கையாலும் திருக் குறளுக்கு வீணான விளக்கம் தரு வது அன்று. குறள் நெறிப்படி நடப்பதேயாம். இதுவே நன்று" என்ற கருத்தைக் கருவாககக் கொண்டு ஒருவர் ஒரு கல்லூரியில் சொற்பொழிவாற்றினர்.

அவர் வேறு யாருமல்ல தமிழ் நாட்டுத்துறவி ; வசதியிருப்பதால் தரணியில் பவனிவரும் 'விசித்திர வேதாந்தி' !

'குறள் நெறிப்படி நட' என்ற துறவியின் உறுதிமொழி என் உள் ளத்தில் உறுத்திக்கொண்டே இருந் தது. காரணம், மறையவரின் துற வுக்கோலம், வள்ளுவனாரின் வாய் மொழி இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக, முற்றிலும் வேறுபா டாகத் தெரிந்தன.

வெந்ததைத் தின்று விட்டு வாயில் வந்ததைப் பேசும் வேதியர் கூட்டத்தைச் சேர்ந்தவரோ--அடி கள், என்று ஐயப்பாடு எழும் அள வுக்கு அவரது பேச்சுக்கும் செய லுக்கும் வேறுபாடு இருக்கிறது.

'துறவு' என்ற தலைப்பில் பத்துக் குறட்பாக்கள் இருந்த போதிலும் அதை 'அறம்' என்று ஓரிடத்திலும் உரைக்கவில்லை. துறவுக்கு இலக் கணம் வகுக்குமிடத்தும் 'காவிகட்ட வேண்டும், கமண்டலம் ஏந்தவேண் டும், சடாமுடி வளர்க்கவேண்டும், கோவில் ஒன்றுக்கு அதிபராக இருக்கவேண்டும், அக்கோவிலுக் கென்று நிலங்கள், ஊர்கள், நகை கள் இதுபோன்ற சொத்துக்கள் ஏராளமாக இருக்கவேண்டும்" என்றுஎள்ளளவுகூடஇயம்பப் பெற வில்லை. ஆனால் 'துறவற இயல்' என்ற தலைப்பு, துறவுபற்றி விளக் கும் அதிகாரங்களுக்கு எல்லாம் சேர்த்துக் கொடுக்கப் பெற்றிருக் கிறது. இத்திருநாமம் (துறவற இயல்) திருவள்ளுவரே தந்திருப் பார் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், துறவை விளக்கும் எந்தத் தனிப்பட்டக் குறளிலும் அதை அறமென்றே அவர் இயம்ப வில்லை.

'அறமெனப்பட்டதே இல்வாழ்க் கை.' 'இல்வாழ்வான் துறந்தோர்க் கும் துணை' மற்றவரையும் அற நெறியில் ஒழுகச்செய்து, தானும் அறம்தவறாது நடத்தும் இல்வாழ்க் கை, தவம்செய்வோரைவிட மிக்க வல்லமை உடைய வாழ்க்கை யாகும். 'வாழ்வாங்கு வாழவேண் டும்' என்பதே வள்ளுவனாரின் விருப்பம்; அவர் வகுத்த வாழ்க் கைச்சட்ட நூல் சொல்லும் கருத்து.

இதை விடுத்து, இதன்படி நட வாது, "குறள்நெறிப்படி நட" என்று அறிவுரை வழங்கும் விசித் திரப் பிறவிகளுக்கு என்ன பெயரிட் டழைப்பது ? "உபதேசம் உலகில் மலிவான சரக்கு, இந்த நாட்டு மக்கள் எதை எப்படிச் சொன்னா லும் செரித்துக் கொள்கிறார்கள்," ஊர் சுற்ற பணவசதி இருக்கிறது, ஒலிபெருக்கிக் கிடைக்கிறது நாமும் பேசுவோம்" என்ற அகங்கார எண்ணமா ? ஆனால் உண்மையை மறைத்துவிட முடியுமா ? உலகம் பழிக்கும் நிலையை வருந்தி அழைத் துக்கொள்ள வேண்டாம் என்று குறள் சார்பில் நின்று அடிகளுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

மழித்தலும் நீட்டலும்
வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்
(280)

துறவற இயலில், கூடா ஒழுக் கம் என்ற அதிகாரத்தில்தான் இப் பாட்டு, மொட்டை அடிக்க வேண் டாம். முழுச்சடை வளர்க்கவும் வேண்டாம்; 'இது நன்று அன்று' என்று உலகம் பழிக்கும் தீயசெயல் களைத் துறந்தால் போதும்; குறளைக் கற்றறிந்த, கனவில் வள்ளுவரைக் கண்டு உரையாடியதாக உரைத்த துறவிக்கு மேற்கூறிய பாட்டு இருக் கும் இடமும், பொருளும் தெரியு மென்று நம்புகிறோம்.

என்ன நீயும் முன்னுக்குப் பின் முரணாக மொழிகிறாய் ? அடிகள் குறளைக் கற்றறிந்தவர், வள்ளுவ னாரைக் கனவில் கண்டவர் என்று கூறினாய் ? பின்பு பாட்டு இருக்கும் இடத்தையும் பொருளையும் அவர் அறியாதவர் என்று சொல்லாமல் சொல்லுகிறாய் ?--இச்சந்தேகம் எவ ருக்கும் எழத்தான் செய்யும்.

அவரின் துறவுக்கோலம் அப் படிச் சொல்ல வைக்கிறது. அது மட்டுமன்று. அத்துறவுக்கோலத தில் எத்தனையோ மதவாதிகள் பற்பல கூடாத செயல்கள் புரிவது அவருக்குத் தெரிவதில்லை. "ஆறு கால பூஜையில் பித்தளைப் பாத் திரங்களை தங்கமாக்குகிறேன், பத் தைப் பதினாயிரம் ஆக்குகிறேன். பிள்ளைவரம் தருகிறேன்" என்று மாயமொழி பேசி தீயன செய்யும் எத்தர்கள், தெருவிலே நிருவாண மாகத் திரிய உரிமை உண்டு என் றுரைக்கும் கருத்துக் குருடர்கள், காமச்சாமிகள்...இவர்களில் எவ ரும் அடிகளுக்குத் தெரிவதில்லை. அவரின் அருள்நெறி அவர்களிடம் பலிப்பதில்லை. தான் சார்ந்த மதக்கோட்டைக்குள்ளே சீர்திருத் தம் செய்துவிட்டு, நாத்திகர்களைத் திருத்த, சொற்பொழிவிற்கு கிளம் புவது நல்லது. தன்னையும் தன் னைச் சார்ந்தோரைப் பற்றியும் தெரி யாமல் இருக்கும் அடிகள் ஒருவேளை திருக்குறளில் அக்குறளையும்... !

எதற்கு இந்தச் சாமியார் வேடம்? எதற்கு இச்சடாமுடிக் கோலம் ? பண்டார வேடம் பூண்ட மேலோரே ! முக்கண் சிவன், மனைவி இருக்க, மற்றொரு மங்கையை--கங்கையை சடாமுடியில் மூடிவைத்திருப்பது போல், காமக்கணிகைகளை கருங் குஞ்சிக்குள் மறைப்பதற்கா ?

வஞ்சியரோடு கொஞ்சிக்குலவும் வேளை, மாற்றார் கண்டுவிட்டால், யாரோ இரண்டு பெண்கள் இருக் கிறார்கள் என்று எண்ண, உண்மை அம்பலமாகாதபடி ஆண் பெண் வித்தியாசத்தை எவரும் அறியாமல் இருப்பதற்கா ? பண் ணிகர் பெண்ணோடு பாய்போல் விரித் துப் படுப்பதற்கா ?

எமனது பாசக்கயிறு போல், தங்கள் சடாமுடிமயிரால் பக்தர் களைப்பற்றி இழுத்து அவர்தம் பொருளைப் பறித்து, அந்த ஏமாளி களை முக்தர்களாக்கவா--முழுக்க முழுக்க நடைப்பிணமாக்கவா ?

வளைந்து நெளிந்து மண்ணைத் தழுவும் நிலையில் நடனமாடிச் செல்லும் தையல்களின் பாதத் தூசிகளைத் தட்டித் தூய்மை செய் யவா ?

பிழைப்பை நடத்த, அந்தரங்க 'ஆசாபாசங்'களை பூர்த்தி செய்ய மாயத்துறவு பூண்டுள்ளோம். ஆதலால் மயிரைக்கூட துறக்கமாட் டோம் என்று சொல்வதற்கா ? வேறு எதற்காக சடாமுடி வளர்க் கிறீர்கள் ? வானத்தைத் தொடும் அளவு, உங்கள் வினையால் வந்த பழிச்சுமை வளர்வதுபோல், நீங்கள் எதற்கு இவ்வளவு நீளமாக சடை வளர்க்கிறீர்கள் ? காரணம் சொல் லுங்கள்.

"ஐயகோ, எப்படித் திட்டுகிறான்? --பாவி !" என்று எரிந்து விழா தீர்கள் ! மேலே கூறியிருப்பது என் சொந்தச் சரக்கல்ல. நாத்தி கர்களின் சொல்லம்பும் அல்ல. ஒரு பழுத்த பக்தரின் கருத்து. நன்கு அறிமுகமானவர் ; யார் தெரிகிறதா ?--திருவாளர் வேத நாயகம்(பிள்ளை) அவர்கள்; அவரது வாக்கை அப்படியே தருகிறேன்.

பெண்ணைச் சடையில் வைத்தவன்
போற்
பெண்கள் பலரை
யொளிப்பதற்கோ
பிறர்கண்டாலு(ம்)
ஆண்பெண்ணெனும்
பேதந்தெரியா திருப்பதற்கோ
பண்ணைப்பழிக்கு மொழியரோடு
பாய்போல் விரித்துப்
படுப்பதற்கோ
பாசக்கயிறு போற் பிறரைப்
பற்றியிழுத்துப் பறிப்பதற்கோ
மண்ணைத்தழுவ நடக்குமின்னார்
மலர்க்காற்றூசி தட்டுதற்கோ
மாயத்துறவு பூண்டதன்றி
மயிருந்துறவோ மென்று
கொலோ
விண்ணைத் தழுவும் பழிச்
சுமைபோல்
மிகவே சடையை நீர்வளர்க்கும்
விதமென் சொல்வீர் பண்டார
வேடம்பூண்ட மேலோரே !

அடிகளிடம், வேதநாயகரின் வினாக்களுக்கு பதில் கேட்கவேண் டும் என்பது எங்கள் நோக்கமல்ல; பதிலும் தேவையில்லை. பக்தர் குழாம் முக்திக்கு வழிதேடுமுன் தங்கள் மூளையின் ஓர் மூலையில் இவற்றைப் போட்டுக்கொண்டால் போதும். நாளடைவில் நல்ல பயன் தரும். ஏன் தெரியுமா ? அவைகள் வினாக்களல்ல ; சிந்தனை மரத்தை வளர்க்கும் வித்துக்கள். தினை விதைத்தால் தினை கிடைக்காமலா போகும் !

—இளம்பூரணன், B A.

வெளிவந்து விட்டது !

மலர்
இலக்கிய மாத இதழ்
ஆசிரியர்: வே. கபிலன்,
பதிப்பாசிரியர்: கோ. ஜெயராமன்

செப்டம்பர் இதழில்

டாக்டர் மு. வரதராசனார், அ. மு. பரமசிவானந்தம், ம. இராச மாணிக்கம், க. அன்பழகன், கவிஞர் சுரதா, சி. பி. சிற்றரசு, சொர்ணம், மாயாண்டிபாரதி, பூவை. எஸ். ஆறுமுகம், எல்லார்வி, கௌந்தி, மயிலை சிவ. முத்து, ஆகியோரின் கட்டுரைகளும், கதை களும் சிறந்த முறையில் வெளிவருகின்றன. விலை அணா 4.

நிர்வாகி : மலர்
த. பெ. 1868- சென்னை-1.

"ரஷ்ய இலக்கியம்" பூபாளம் - எழுவீர் ! எழுவீர் ! ! என்ற நாதத்தைப் பரப்பிற்று. பிறகே, லெனின், தூக்குவீர் கத்தியை ! தாக்குவீர் எதிரியை ! ! என்று பரணி பாடினார்

—அறிஞர் அண்ணா.

தோழர் ப. வாணன் தீட்டிய

ரஷ்ய இலக்கியம்

விலை ரூ. 1—8—0.

திராவிடப் பண்ணை,
தெப்பக்குளம் :: திருச்சி.

வெண்பாப் போட்டி

14. பொய்யடா பொய்யடா பொய்!

வெண்பாப் போட்டி 14-ன் பரிசுபெற்ற வெண்பாவும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவும் சென்ற இதழில் வெளியிடப்பட்டன. இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களும் வெளிபிடப்பட்டுள்ளன. இத்துடன் 2வது தரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெண்பாக்கள் எழுதியவர்களின் பெயர்களையும் வெளியிட்டிருக்கிறோம்.

வெய்யலோன் வேட்கையினுல் வேர்பிரிந்த வையமிதை
ஐயனுர் ஆக்கினுரென் றோதுவதும்--மெய்வருத்திச்
செய்தொழிலைத் தொல்வினையாய்ச் சொல்லுவதும் [ஆரியத்தின்
பொய்யடா பொய்யடா பொய்.

—தமயந்தி, சென்னை-10.

★

மன்னுபுகழ் செந்தமிழாள் வண்ணத்தா ளாயிருக்க
இன்னுமிங்கே இந்திமொழி ஏனடா--உன்னிப்பார்
செய்கின்றுர் இந்நிலை; செப்புமவர் வித்தையெலாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—வ. முத்தையன், திருச்சி.

★

இப்பிறப்பில செய்தவினை ஏழ்பிறப்பும் சூழுமென்று
செப்பும் மொழியதனை ஆராயின்--இப்பாரில்
மெய்யாகக் கற்பனையில் மேவிவிட்ட பொய்யிலொரு
பொய்யடா பொய்யடா பொய்.

—வி. ஆர். துரைசாமி, நாட்டறம்பள்ளி.

★

மண்ணெடுபெண் பொன்னசை அற்றவராம் ஆண்டவனுர்
என்றுரைப்பர், காணின் எதுவில்லை?--என்னண்ப!
'மெய்'யடியர் கூற்றும் செயலும் உணர்வையேல்
பொய்யடா பொய்யடா பொய்.

—ந. மு. விசுவநாதன், அரக்கோணம்.

★

குள்ள முனியொருவன் வானேர் குறையிரப்ப
அள்ளிக் குடித்தானும் ஆழியெலாம்--நல்லதுகேள்
மெய்யடியார் கூட்டம் மெழுகும் புராணமெலாம்
பொய்யடா பொய்யடா பொய்!

—த. பழனியப்பன், அண்ணுமலைநகர்.

★

இயற்கையில் தெய்வமுண்டு; இல்லென்பார் இல்லை!
செயற்சிலைதான் தெய்வமாமோ? செப்பாய்! [--கயல்விழியாள்
மெய்ம்மேனி இன்முயக்கு மாயையெனும் வேதாந்தம்
பொய்யடா பொய்யடா பொய்.

—ஆ. ப. பரமானந்தம், புதுஆயக்குடி.

★

ஆரியரும் தீந்தமிழின் ஆன்றேரும் ஒன்றென்று
பாரறியக் கூறிப் பசப்புகின்றுர்- சீர்தமிழா!
உய்யவழி தேடும் உலுத்த ரவர்கூற்றுப்
பொய்யடா பொய்யடா பொய்.

—இராம, மாணிக்கம், நெற்குப்பை.

★

இல்லா ளுடனினிது இல்வாழ்க்கை யாற்றுவது
பொல்லாங்கு என்றுரைப்போர் போலிகளே--இல்லைவிட்(டு)
உய்யடா உய்யென் றுணர்த்தும் மொழிகளெலாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—எல். பி. சமாதானம், அண்ணுமலைநகர்.

★

பொய்யை உனக்குரைத்துப் பொன்னைத் தமதாக்க
ஐயரவர் ஆற்றுகிற ஆசிகளின்--பொய்யனைத்தும்
மெய்யாக நீயுணர்ந்தால் மேல்வீடும் மேதினியில்
பொய்யடா பொய்யடா பொய்.

—கு[illegible]வேல், வாணியம்பாடி.

கொய்யாத பூக்களைக் கொண்டுள்ள கொம்பன்னுள்
எய்யாது யெய்யும் விழியின்பம்--வையத்தில்
மையுண்கண் மதலையும் மாயையாம் என்றசொல்தான்
பொய்யடா பொய்யடா பொய்.

—கலைநேசன், திருவையாறு.

★

கஞ்சியில் லையென கெஞ்சிடுவோ ரெல்லோரும்
பஞ்சையாய் பட்டினியாய் எம்நாட்டில்--நெஞ்சுலர்ந்து
உய்கின்ற போதுசெல்வர் வாழ்ந்திடும் வாழ்வுதான்
பொய்யடா பொய்யடா பொய்.

—மு. சம்பங்கி, காவனூர்.

★

பொய்பொய் புராணம்பொய் பார்ப்பனர்செய் சாத்திரம்
பொய்பூணூற் பஞ்சாங்கம் பொய்தோழா--மெய்யிலை
அய்ய ரரசாங்கத் திட்டமதில் எல்லாமே
பொய்யடா பொய்யடா பொய்.

—மணாளன், திருமங்கலம்.

★

நன்மையும் புன்மை நயத்தக்கால் பொய்மையெனின்
புன்மையே பூப்பவை பொய்யலவோ? [--பொன்மொழியோய்!
வெய்துாட்டும் வேதம் புராணம் விழுப்பொருள்
பொய்யடா பொய்யடா பொய்.

—சி. கணேசன், அழகியநல்லூர்.

★

எண்ணரிய பொய்களால் ஏய்த்தலொடு நம்மையே
கண்ணிலா அந்தகரா யெண்ணிவரும்--பண்பிலார்
மெய்யென ஓதும் புரோகிதம் மெத்தவும்
பொய்யடா பொய்யடா பொய்.

—இரா. செயராமன், ச. கோடியூர்.

★

பெண்கேட்ட பிள்ளைக் கறிகேட்ட, வேடவனின்
கண்கேட்ட தெய்வமும் தெய்வமாமோ?--விண்கண்ட
மெய்யவர்போல் ஏய்க்கின்றுர்; மெய்யன்று அன்னுர்சொல்
பொய்யடா பொய்யடா பொய்.

—கா-பொ. சண்முகம், சைதை.

★

வேசியினர் இன்பத்தை விற்றுண்டு மெய்யொழித்துப்
பேசிடுவார் அன்பாற் பிணைந்தாற்போல்--காசுக்காய்!
ஐயமில்லை அன்னுர் அரவணைத்துச் சொல்வதெலாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—பழ. நடராசன், மண்ணடி.

★

செந்தமிழர் பண்டு சிறப்புற்று வாழுங்கால்
நந்தமிழர் வாழ்வழிக்க நாடடைந்து--அந்தமிலா
செய்ய தமிழதனில் சேர்த்த புராணமெலாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—சித. சுப்பிரமணியன், மேலைச்சிவபுரி.

★

அணுவும் தமிழறியார்; ஆன்றகுறள் தன்னை
மனுவின் வழியென்பார்; மற்றும்--பணம் புகழ்க்காய்ப்
பொய்யா புரியார் புக[illegible]தெலாம் சீர்தூக்கின்
பொய்யடா பொய்யடா பொய்.

—பொன்னரங்கன், ஆரியலூர்.

★

நற்றவத்து ஞானியரும் நூல்நனி கற்றேரும்
மற்றுமுள மந்தமதி மாந்தருந்தான்--பொற்றெடியே
மெய்யெனவே காயமதை வித்தையாய் விண்டிடல்தான்
பொய்யடா பொய்யடா பொய்.

—பு. ஸ்ரீநிவாசம், கர்ணம், காரணப்பட்டு.

★

வெய்யில் தரும்பரிதி வீசும் இளந்தென்றல்
பெய்யுமழை தோன்றும் பிறைமதியும்--வையத்தில்
மெய்த்தெய்வம் மற்றந்த மேலுலகத் தெய்வமெலாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—அ. சு. பழனிசாமி, கொண்டலாம்பட்டி.

★

நாட்டைக் கெடுத்து நனிவஞ்சம் செய்திங்கு
வாட்டும் வடநாட்டு ஆட்சியினர்--தீட்டுகின்ற
வாய்மையிலாத் திட்டம் வளர்ந்தோங்கும் என்பதெல்லாம்
பொய்யடா பொய்யடா பொய்.

—பா. ராமமூர்த்தி, திருமங்கலம்.

★

உடலது குன்றி உயிரின்பம் நீங்கி
கடலொத்த வாழ்வுமிழந் தேன்யான்--மடமையால்
மெய்யுணரா நாளில் விதவையா மென்வாழ்வும்
பொய்யடா பொய்யடா பொய்.

—இரா. இளங்கவி, கண்டர்கோட்டை.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, [illegible] ரோடு, சென்னை - 6.